# சத்திய வேத பாதுகாவலன்

Telegram "CATHOLIC PRESS", JAFFNA. | 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. | Telephone: No. 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வியர்த்தம்"

87-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1962-ம் ஆண்டு தைமாதம் 14-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை — பிரதிசதம் 12 | 2-ம் இலக்கம்

## பம்பாயில் மௌன திருச்சபைக்காக

### 25-வது தபக்கோல சுற்றுப்பிரகாரம்

அண்மையில் பம்பாய் நகரில் நடந்த 11 மைல் தூரமுள்ள தவக்கோல சுற்றுப்பிரகாரத்தில் இலங்கையும் இடம்பெற்றிருந்தது. இரும்புத்திரைக்குப் பின்னுள்ள நாடுகளிலுள்ள மௌனத் திருச்சபைக்காகவும், சிறப்பாகச் சீனாதேசத்தின் திருச்சபைக்காகவும் அனுட்டிக்கப்பெற்றுவரும் தவக்கோல சுற்றுப்பிரகாரங்களில் இது 25-வது ஆகும். இச்சுற்றுப்பிரகாரம் கிர்காவுமிலுள்ள அர்ச். திரேசம்மாள் ஆலயத்திலிருந்து ஆரம்பமாயிற்று. இம்முறை ரூஷியாதேசத்தின் இராக்கினியாகிய விளடிமீர் மாதாவின் படம் மேன்மைதங்கிய கருதினால் கிறேஷியஸ் ஆண்டகை அவர்களால் ஆசீர்வதிக்கப்பெற்றுச் சுற்றுப்பிரகாரத்துக்குமுன் கொண்டு செல்லப்பட்டது. பண்ட்றூவிலுள்ள மரியாயின் குன்று என்ற இடத்தில் கருதினால் ஆண்டகை அவர்கள் பிரசங்கம் நிகழ்த்தி சுற்றுப்பிரகாரத்தில் பங்குபற்றியவர்களைப் பாராட்டி உற்சாகப்படுத்தினார். அத்துடன் சீனாதேசத்திற்காகச் செபம்செய்யும் இயக்கத்தின் தேசீய தலைவராகிய வணக்கத்துக்குரிய ரோக் பெரேரா சுவாமியவர்களிடம் பரிசுத்த பாப்பரசர் 23-ம் அருளப்பரது அப்போஸ்தொலிக்க ஆசீர்வாதத்தை அருளும் பாப்பரசரது கையெழுத்துக் கடிதம் ஒன்றையும் கருதினால் ஆண்டவர் வழங்கினார்.

சுற்றுப்பிரகாரத்தின் குறித்த ஒரு கட்டத்தில் இந்தியாதேசத்திற்கு விருந்தினராக வந்திருந்த ரூஷியதேச ஜனாதிபதியும், அவரது பாரியாரும் சடுதியாக எவருமே எதிர்பாராதவிதமாய்ச் சுற்றுப்பிரகாரத்தைச் சந்தித்தனர். திறந்தகாரில் பயணம் செய்து கொண்டிருந்த இவர்கள் எழுந்து ரூஷியமாதாவின் திருஉருவத்திற்குச் சந்தோஷத்துடன் மரியாதை செய்தனர்.

## அப்போஸ்தலரான அர்ச். பிலிப்புவின் சமாதி கண்டுபிடிக்கப்பட்டது

மேற்குத் துருக்கியில் மியான்டர் நதிக்கரையில் பழைய ஹியராப்பொலிஸ் பட்டணத்தில அப்போஸ்தலரான அர்ச். பிலிப்புவின் கல்லறை கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. துறினிலுள்ள பல்நுட்பக்கழகப் பேராசிரியர் பாவுலோ வேர்சோன் 5-ம் நூற்றாண்டுக்குரிய அழிந்த ஆலயமொன்றை அகழ்ந்து ஆராய்ந்தபொழுது அக்கல்லறையைக் கண்டுபிடித்தார். யேசுநாதருடைய சீடர்கள் அடக்கஞ்செய்யப்பட்ட இடங்களைச் சரித்திரசான்றுகள் கொண்டு அறியமுடிந்தவைகளில் அர்ச். பிலிப்புவின் சமாதியுமொன்று.

எபேசுசில் 2-ம் நூற்றாண்டிலிருந்த பொலிக்கிராற்றெஸ் மேற்றிராணியார் 1-ம் விக்ர் பாப்புவுக்கு கி. பி. 190-ம் ஆண்டளவில் எழுதிய லிகிதத்தில் "12 அப்போஸ்தலரில் ஒருவரான பிலிப்பு ஹியராப்பொலிசில் மரித்தார்" எனக் கூறியிருக்கிறார். அப்போஸ்தலருடன் தொடர்புகொண்ட கிறிஸ்தவ குடும்பங்களுள் பொலிக்கிராற்றசுடையதும் ஒன்று.

### முதல் நாடு

அர்ச். பிலிப்பு ஆர்மீனிய மக்களை மனந்திருப்பினாரெனக் கருதப்படுகிறது. புராதன உலகமக்களில் பூரணமாக மனந்திரும்பிய நாடுகளில் ஆர்மீனியாவும் ஒன்று. தற்கால ஆர்மீனிய எல்லையிலிருந்து 880 கல் தொலைவிலிருந்த ஹியெராப்பொலிஸ் தற்போதைய துருக்கிப்பட்டணமாகிய டெனிஸ்லிக்கருகே உண்டு. இது முற்காலம் லாவோடிசேயா என அழைக்கப்பட்டது. காட்சியாகமத்தில் குறிப்பிட்டிருக்கும் ஏழு சபைகளில் ஒன்று. விவிலிய ஆராய்ச்சியாளர் ஹியராப்பொலிசை அறிந்திருந்தபோதிலும் தொல்பொருள் ஆராய்ச்சி இதுகாலவரை அங்கு நடைபெறவில்லை. அங்கிருந்த எண்புயக் கோயிலின் சுவர்கள் சில அழிகரையாயிருக்கின்றன. சலவைக் கற்கள் சிலவற்றையுங் காணலாம். 200 அடி நீள அகலமுள்ள இவ்வாலயத்திற்கு நாற்றிசையிலும் வாசல்களிருந்தன.

### நடுவில் பீடம்

எட்டுத்தூண்களில் மாடமொன்று அமைந்திருந்தது. தற்பொழுது தூண்களைக் காணலாம். அப்போஸ்தலரின் சமாதியை மையமாகக் கொண்ட பீடத்தைச்சூழ்ந்து விசுவாசிகள் வட்டமாய்நின்று தொழுதிருப்பர்.

அர்ச். பிலிப்பு மீனவர் வசித்த துறைமுகமான பெத்சாயிதாவைச் சேர்ந்தவர். கலிலேயக் கடலோரத்திலுள்ள இப்பட்டணத்துக்கு இராயப்பர், பெலவேந்திரர், யாகப்பர், அருளப்பரும் சேர்ந்தவர்கள். கர்த்தர் அழைத்த ஆதிச்சீடரில் ஒருவரான பிலிப்பு தன் நண்பன் நத்தனாயேலையும் அழைத்துச்சென்றார். பிலிப்பு ஒருவருக்கே கிரேக்க பெயருண்டு. சில கிரேக்கமக்கள் இரட்சகரைச் சந்திக்க விரும்பியபொழுது பிலிப்புவையே தமது தூதுவர் ஆக்கினர்.

---

## குருத்துவ தங்கயூபிலி கொண்டாடிய குருப்பிரசாதிகளுக்குப் பாப்பரசரின் ஆசீர்

வத்திக்கான் நகரம்
4-1-62.

வண. சுவாமிகள் இம்மானுவேல் சவிரிமுத்து, நீக்கொலாஸ் பிலிப், அந்தோனி தோமாஸ் ஆகியோரின் குருத்துவ அபிஷேக தங்கயூபிலியின் போது பரிசுத்ததந்தை யூபிலிநாகர்களுக்கு இதய பூர்வமாகத் தமது அப்போஸ்தொலிக்க ஆசீரை அருளுகின்றார்.

கருதினால் சிக்கோஞ்ஞானி.

---

## திருவழிபாட்டில் லத்தீன் இடம்பெறவே வேண்டும்

தேவவழிபாட்டில் லத்தீன் மொழி தனக்குரிய தலைமையிடத்தைப்பெறவேண்டும் எனத் திருவழிபாட்டுச் சங்கீத சபையின் 50-வது ஆண்டுவிழாவையொட்டி எழுதிய கடிதத்தில் அருளப்ப பாப்பரசர் குறிப்பிட்டிருக்கிறார். கிராமப்புறக் கோயிலில் என்றாலும், பெயர்பெற்ற மகாலயத்திலென்றாலும் திருவழிபாட்டில் லத்தீன்மொழி செங்கோல் செலுத்தச்செய்வது ஒரு பரிசுத்த கடமையாகும்.

தன்னளவிலும், றோமன்சபையின் வழிபாட்டுச் சங்கீதத்துடன் இணைந்ததென்றஅளவிலும் மாத்திரமல்ல ஒற்றுமையின் சிறப்பான, தெளிவானசின்னம் என்றமுறையிலும் இம்மொழி இடம்பெறுவது அவசியம். திருச்சபையின் மக்களுடைய மேன்மை நிறைந்த தாய்மொழி இதுவன்றோ.

மக்களுக்குத் திருவழிபாட்டைப் படிப்பிக்கும் பொழுது, "அவர்கள் செபமுறைகளைப் பத்தியோடும், விளக்கத்தோடும் கைக்கொள்ள உதவியான துணைநூல்களை உபயோகிப்பது மிகவும் விரும்பத்தக்கது" எனப் பாப்பரசர் குறிப்பிட்டார். இவ்வகையில் திருவழிபாட்டுச்செயல்முறையை அநேகர் அதிகம் ஆதரிப்பர். பிரதேசமொழிகளில் நடைமுறையில் இருந்துவரும் சங்கீதங்களும், புதிய கீர்த்தனங்களும் உபயோகிக்கப்படுவது அவசியம். இவைகளை மேற்படி சங்கம் காப்பாற்றும் முயற்சியை நாம் பெரிதும் ஆதரிக்கிறோம். கோயில் சடங்குகளில் பண்டுதொட்டு உபயோகித்துவரும் நாட்டுமொழிச் சங்கீதங்கள் ஞானமதிப்பு நிறைந்தவை. செபவேளை ஒருமித்துச் சங்கீதம்பாடுதல் ஒருமித்த அன்பிற்கு அடையாளமாகும் எனவும் பாப்பு குறிப்பிட்டார்.

## செபத்தில் ஐக்கியந்தேடும் அங்கிளிக்கன் சபையினர்

அங்கிளிக்கன்சபைக்குச் சேர்ந்த நோயாளரும், அங்கவீனரும் கத்தோலிக்க கன்னியாஸ்திரியார் சபை ஒன்றுடன் செபத்தில் ஐக்கியப்படும் இயக்கமொன்றை அங்கிளிக்கன்சபைச் சந்நியாசியான அந்திரே பியட் சகோதரர் நடத்திவருகிறார்.

பியட்சகோதரர் இருமுறை பிரான்சிற்குச் சென்றிருந்தபொழுது சிலுவையில் அறையுண்ட யேசுவின் கன்னியாஸ்திரிமார் சபையைப்பற்றி அறியவந்தார். இச்சபையின் ஒவ்வொரு அங்கத்தவரும் ஏதோ ஒரு துன்பம்உள்ளவர்கள்; தியானயோக முறையினர். இவர்கள் "சிலுவையிலறையப்பட்ட யேசுவின் ஐக்கியம்" எனும் சங்கத்தை நடாத்தி, துன்பமனுபவிப்போரும் அங்கவீனரும் கன்னியாஸ்திரிமாருக்காகச் செபிக்க, பதிலாக அவர்களின் ஞானப் பலன்களில் பங்கடைகின்றனர். "அங்கிளிக்கன் சபையினரில் நோயாளராய், அங்கவீனராயுள்ளவர்கள் இவ்வைக்கிய சங்கத்திற் சேர்ந்து சிலுவையடியில் ஒருமித்துச் செபித்தல் எம்மைப் பிரித்துவைக்கும் தடைகளைத் தாண்ட உதவும்" எனக் கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வதிரியில் தங்கயூபிலி நாயகருக்கு வரவேற்பு

வதிரிவாசிகளுக்கு ஒரு பொன்னாள் 7-1-62. அன்று அவர்கள் தங்களின் அரும்பெரும் குருவர் வண. பிதா பி. நீக்கிலாஸ், ஓ. எம். ஐ. அவர்களின் குருப் பட்டாபிஷேகத்தின் ஐம்பதாம் ஆண்டு யூபிலிவிழாவைச் சிறப்பாகக்கொண்டாடினர். யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பாகங்களிலுமிருந்து பலகுருக்களும், இனசனர் சிநேகிதர்களும் அங்கு சமூகமளித்திருந்தனர்.

அன்றுகாலை 8 மணிக்கு யூபிலிநாயகர், வண. எண். ஈ. குணசீலன், பி. ஈ. அல்பிறேட் சுவாமிகள் உதவிபுரிய அர்ச். அந்தோனியார் கோயிலில் பாடற்பூசை ஒப்புக்கொடுத்துத் "தெதேயும்" என்ற தேவதோத்திரப் பாடலைப்பாடி ஆசீர்வாதம் அளித்தனர். திவ்வியபூசையின்போது என்றிக்கப்பர் கல்லூரி அதிபர் வண. பிதா எல். ஏ. சிங்கராயர், ஓ. எம். ஐ., எம். ஏ. அவர்கள் குருத்துவத்தின் மகிமையைப்பற்றியும், பிதா நீக்கிலாஸ் அவர்கள் யாழ்ப்பாண மேற்றிராசனத்தில் சென்ற அரை நூற்றாண்டுகளாகக் கத்தோலிக்க வேதப்பரப்புதல் வேலையிலும், கல்வித்துறையிலும் ஆற்றிய பல அரிய தொண்டுகளைப்பற்றியும் விரிவாய் எடுத்துத் தமது அரியபிரசங்கத்தில் விளக்கிக்காட்டினார்.

அதன்பின் யூபிலிநாயகருடைய இனசனர் அவரை மையமாகக் கொண்டு ஒரு பிரதிமைப்படம் எடுத்தனர். இதுமுடிந்ததும் சமூகமளித்த சகலருக்கும் காலைப்போசனம் அளிக்கப்பட்டது.

இதன்பின் யூபிலிநாயகருக்குத் திரு இருதயக் கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் வண. பிதா ஏ. கருணாகரர் தலைமையில் மகத்தான வரவேற்புப் பகிரங்கக் கூட்டமொன்று நடைபெற்றது. அவ்வமயம் ஒரு வந்தனோபசாரப்பத்திரம் திரு. என். அகுஸ்தீன் அவர்களால் வாசித்து அளிக்கப்பட்டது. அக்கூட்டத்தில் உடுப்பிட்டிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. எம். சிவசிதம்பரம், திரு. ஈ. ஆனந்தராசா, வித்துவான் என். வேதநாயகம், திரு. கே. பி. முத்தையா, பேராசிரியர் பி. சவிரிமுத்து ஆகியோர் சுவாமியவர்களின் அரிய பெரிய தொண்டுகளைப் பற்றியும், ஆற்றல் ஆர்வம் அயரா உழைப்பு ஆகிய குணாதிசயங்களைப்பற்றியும் புகழ்மாரி பொழிந்தனர். சுவாமிகள் எல்லோருக்கும் தமது நன்றியைக்கூறி நல்லாசி ஈந்தனர்.

இனசனர் சிநேகிதர் மற்றும் பலர் தங்கள் அன்பளிப்பைச் சுவாமிக்குச் செலுத்தினர். ஈற்றில் ஆசிரியர் வி. அந்தோனிப்பிள்ளை அவர்களின் நன்றியுரையுடன் பகிரங்கக்கூட்டம் இனிதே நிறைவெய்தியது.

அன்றுமாலை 6-30 மணிக்குச் சுவாமிகள் தலைமையில் தொன்போஸ்கோ நாடகம் அவ்வூர் வாலிபரால் கல்லூரி மண்டபத்தில் திறம்பட நடித்துக்காட்டப்பட்டது.

**யூபிலிநாயகர் பல்லாண்டு வாழ்க!**

* * *

## அக்குவைனஸ் சர்வகலாசாலைக் கல்லூரியில் 30 பட்டதாரிகள் சித்தி

சென்றவருடம் நடந்தேறிய லண்டன் சர்வகலாசாலைப் பட்டதாரப் பரீட்சைகளில் கொழும்பிலுள்ள அக்குவைனஸ் சர்வகலாசாலைக் கல்லூரியில் கல்விபயின்று பரீட்சைகளுக்குத் தோற்றிய 30 பேர் பரீட்சைகளில் சித்தியெய்திப் பட்டதாரிகள் ஆகியுள்ளனரென்று அண்மையில் வெளிவந்த பரீட்சைச்சித்திப் பட்டியலிலிருந்து தெரியவந்துள்ளது. சித்தியெய்தியோருள் வணக்கத்துக்குரிய எம். ஏ. ஆர். பீரிஸ், எஸ். யே. சுவாமிகள் பாலிபாஷையில் 'கொனொர்ஸ்' பட்டத்தை முதல்பிரிவில் பெற்றுள்ளார்.

# மேற்றிராசனங்கள் தரும் செய்தி

## வசாவிளானில் வண. B. A. தோமாஸ், O.M.I. சுவாமியின் குருத்துவ தங்க யூபிலி விழா

தோலகட்டி செபமாலைத்தாசர்சபை ஸ்தாபகரும், அமலோற்பவ மரியநாயகிசபைக் குரவரும், இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் இணையற்ற ஞானியும், சிறுவரின் தோழரும், சிறந்த தருமவாளரும், செபமாலைப் பக்தருமான வண. பி. ஏ. தோமாஸ், ஓ. எம். ஐ. சுவாமியவர்களின் குருத்துவ தங்கயூபிலி விழா சென்ற 9-1-62 சனிக்கிழமைமாலை 4-15 மணியளவில் சந்தியோகுமையோர் கோவிற் கிறிஸ்தவர்களால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

யூபிலிநாயகர் நன்கு அலங்கரிக்கப்பட்ட பந்தரில் எழுந்தேறியதும் அங்கு குழுமியிருந்த சனத்திரள் காகோஷம் செய்து வரவேற்றனர். மாலையும், ஞானப்பூச்செண்டும் திரு. செல்வன் செல்லத்துரையவர்களால் அணிவிக்கப்பட்டது. வந்தனோபசாரப்பத்திரம் படித்துக்கொடுக்கப்பட்டது. பின்பு வரவேற்புக்கீதங்களும், சிறுவரின் கோலாட்டமும், சிறுமிகளின் கும்மி நடனமும் முறையே நடைபெற்றன.

ஈற்றில் சுவாமி தமது குறிப்புரையில் தமது கஷ்டம்நிறைந்த சீவியத்தையும், செபமாலைத்தாசர்சபையினது ஆரம்ப சரித்திரத்தையும் நன்கு எடுத்துக்காட்டினார். இன்றைய விஞ்ஞான உலகில் அஞ்ஞான—அபாய நிலைமை பற்றியும் அதிகமான மக்களின் விசுவாசமற்ற வாழ்க்கைபற்றியும் கூறினார். வேதவிசுவாசம் குறைந்த ஆசிய ஆபிரிக்க மக்களின் மனந்திரும்புதலுக்காகவும், ரூசியநாடு விடுதலைபெறவும், உலக சமாதானம் நிலவவும் தாம் தேவதாயிடம் எப்போதும் மன்றாடி வருவதாகவும், நாமும் உத்தம கத்தோலிக்காய் இன்பத்தை யுவக்கும் பாவங்களை வெறுத்து நித்திய மரணத்தை எப்போதும் நினைந்து பத்தியுள்ளவர்களாய்ச் சீவிக்க வேண்டுமென்றும் மெத்த ஆவலுடன் மன்றாட்டமாய் வேண்டிநின்றார். தாம் தொடங்கிய மடத்தைத் தொடர்ந்து நடத்த நன்முன்மாதிரியான இளைஞர், பெண்கள் முன்வந்து சேர்ந்து உலகசமாதானத்துக்காக மன்றாடவேண்டு மென்னும் ஆசையுடன் பேசினார்.

பின்பு எமது கட்டளைக்குரவர் வண. எம். எஸ். நல்லையா, ஓ. எம். ஐ. சுவாமியவர்கள் யூபிலிநாயகரின் பரிசுத்த சீவியத்தைப்பற்றி ஓர் உருக்கமான பிரசங்கம் செய்தார். மடத்துச் சிரேஷ்டர் வண. ஈ. பேனெட், சி. ஆர். சுவாமி சபையோருக்கு நன்றி தெரிவித்தார்.

கடைசியாக யூபிலிநாயகரின் திருக்கர ஆசீர்வாதத்துடன் கொண்டாட்டம் இனிதே முடிவடைந்தது.

"சந்ததி விருத்தியைத் தேவையான அளவுக்குக் கட்டுப்படுத்திக் கொள்ளச் சுய கட்டுப்பாடு ஒன்றுதான் நிச்சயமான மார்க்கம். கர்ப்பத்தடைக் கருவிகளைப் பயன்படுத்தினால் அது மனித குணத்தின் தற்கொலையாகும்."

— காந்தியடிகள்

## வென்னப்புவாவில் சிலாப மேற்றிராசனத்தினது துறவிகளின் சல்லாப மகாநாடு

சென்றமாதம் 27-ந் திகதி தொடக்கம் 29-ம் திகதிவரை வென்னப்புவ திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் சிலாபமேற்றிராசனத்தில் தொண்டாற்றும் சகல துறவிகளினதும் சல்லாப மகாநாடு ஒன்று வெகுசித்திகரமாக நடந்தேறியது. இம்மகாநாடு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும நடத்தப்பெற்றது. ஆங்கிலத்தில் நடாத்தப்பெற்ற மகாநாட்டிற்குச் சிலாப மேற்றிராணியாரான மகாவந்தனைக்குரிய எட்மண்ட் பீரிஸ், ஓ. எம். ஐ. ஆண்டகை அவர்களே தலைமைதாங்கினார். சிங்களத்தில் நடந்த மகாநாட்டிற்கு அதிவண. ரேூளண்ட் பெரோ சுவாமிகளும், தமிழ் மாநாட்டிற்கு அதிவண. கயித்தான் பொன்னண்டோ புள்ளேசுவாமிகளும் முறையே தலைமைவகித்தனர்.

மகாநாட்டில் துறவிகளின் சீவியம், அவர்களை எதிர்நோக்கிநிற்கும் கஷ்டங்கள், மாற்றமடைந்துவரும் சூழ்நிலையில் அவர்கள் சிறப்பாகச் செய்யக்கூடிய திருத்தொண்டுகள், ஞானோபதேசம் கற்பிக்கும் முறைகள், திருச்சபையின் சமூக படிப்பினைகளும் அவற்றை அனுட்டிக்கும் முறைகளும், இன்னோரன்ன விடயங்கள்பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெற்று, காரசாரமான விவாதங்களின்பின் செயலுக்குரிய சில தீர்மானங்களும் எடுக்கப்பட்டன. இம்மாநாட்டின் பயனாகச் சிலாப மேற்றிராசனத்தில் ஞான விடயங்களில் தீவிர முன்னேற்றமும், வேறு அநேக நன்மைகளும் விளையுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### யூபிலிநாயகர்களுக்கு வரவேற்புவிழா

**அதிவண. எஸ். இம்மானுவேல், வண. பி. நீக்கிலாஸ், வண. பி. ஏ. தோமாஸ் குரவர்கள் மூவருக்கும் நடத்தப்படவிருந்த பகிரங்க வரவேற்புவிழா 14–1–62 ஆகிய இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆசனக்கோவில்மைதானத்தில் ஆரம்பமாகி நடந்தேறும். அன்பர்கள் அனைவரும் அழைக்கப்படுகிறார்கள்.**

## இளந்துறவிகட்கு வரவேற்பு

புத்தளப் பிரிவைச்சேர்ந்த ஒற்றைப் பனையென்னும் கிராமத்தில்வசிக்கும் திரு. எட்வேட் மிரால்என்பவரின் பிரிய புதல்வரும், மாத்தளை மரியாயின் பிரான்சிஸ்கன்மடத்தின் மாணவருமாகிய சங். சகோதரர் அந்தோனியோ அவர்கள் சந்நியாச வார்த்தைப்பாடுகளளித்துத் துறவியாக ஏற்றுக்கொள்ளப்பட்டபின், சொந்தக்கிராமத்திற்குக் கடந்த 12-12-61-ல் முதன்முதலாக விஜயஞ்செய்தபோது அக்கிராமத்தில் வெகுவிமரிசையானமுறையில் வரவேற்பொன்றளிக்கப்பட்டது.

நறுமணமலர் மாலைகள்சூட்டி வரவேற்கப்பட்ட துறவிகள் ஊர்வலமாகத் தேவாலயத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கே பங்குக்குரவர் வண. பிதா எஸ். விசுவாசம் துறவிகள்பேரால் திவ்வியபூசைப்பலி நிறைவேற்றினார். பின்னர் கத்தோலிக்க தமிழ்ப்பாடசாலை மண்டபத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டுப் பிரதிமைப் படங்கள் பிடிக்கப்பட்டபின் தலைமை ஆசிரியர் திரு. எஸ். அந்தோனிப்பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்ற பாராட்டுக்கூட்டத்தில் மரியாயின் பிரான்சிஸ்கன் சபை அதிசிரேஷ்டர் அதிசங். சகோதரர் எஸ். ரீ. ஜுவான், சிலாபம் செண்மேரிஸ் தமிழ் ஆண்பாடசாலை அதிபர் சங். சகோதரர் டபிள்யு. எவ். பீரிஸ், ஆசிரியர்கள் டபிள்யு எலியாஸ்லோவ், எஸ். தமியான்பிள்ளை ஆகியோர் துறவியின் குணநலன்களைப் பாராட்டி இனிய சொற்பொழிவுகளாற்றினர். பின்னர் அவரின் பெற்றோர்களால் சொந்தஇல்லத்தில் பரிமளிப்பான முறையில் விருந்துபசாரணைகள் நடாத்தப்பட்டன. கிராமமக்கள் அனைவரும் வரவேற்புபசாரணையில் கலந்துகொண்டனர்.

அவருடன் சந்நியாச வாக்குத்தத்தம்கொடுத்த மூந்தலைச்சேர்ந்த துறவி சங். சகோதரர் பிளசிடஸ் அவர்கட்கும் அன்றுபிற்பகல் அவரது சொந்தக்கிராமத்திலும், இல்லத்திலும் சிறப்பான முறையில் வரவேற்புகள் அளிக்கப்பட்டன.

— நிருபர்


## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 3730**

**யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டில்**

மானிப்பாய்
முத்தையா முத்துவேலு
— வழக்காளி.

மானிப்பாய்
சுப்பன் செல்வன் — எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டின் M B. 3730-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக் காணிகளை 1962-ம் ஆடு மாசிமீ 24-உ சனிக்கிழமை பிற்பகல் 2மணிதொடக்கம் அந்தந்தக் காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 522-16சதம். 3-11-60 தொடக்கம் 24-4-62 வரைக்கும் ரூபா 300-க்குப் 10வீத வட்டியும், அதன்பின் கூடியமுழுத்தொகைக்கும் 5வீதவட்டியும். இதில் ஏற்பட்ட செலவு ரூபா 123 சதம் 58 கொடுக்கும் வரையும் இறுக்கவேண்டும்.

### காணிகளின் விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திரிக் வலிகாமம் மேற்கு நவாலி மானிப்பாய்க் கோயிற்பற்று, "பிச்சன் பிலாக்கடவை" என்னும்காணி நில. பா. 13½. எல்லை: கிழக்கு — சின்னத்தம்பி காத்தியின் ஆதனம். வடக்கு — சின்னச்சிமடுல் காத்திகேசுவும், வைரமுத்து சிற்றம்பலமும். மேற்கு — வாலுக்கையார். தெற்கு — முருகேசு முத்தையாவின் ஆதனம். இதில் அரைப்பங்கு பிரிக்கப்படாதது.

2. நவாலியில் 'குப்பையன்பிட்டி' என்னும்காணி நில. பா. 10. எல்லை: கிழக்கு — தம்பிப்பிள்ளை கைம்பெண் வள்ளியம்மையின் ஆதனம். வடக்கு — வேலாயுயும் ஆறுமுகத்தின் ஆதனம். மேற்கு — கந்தரின்மனைவி மீனாச்சிப்பிள்ளையின் ஆதனம். தெற்கு — முருகனின்மனைவி வள்ளியம்மைக்கும், மற்றவர்களுக்கும் உரிய ஆதனம். இதில் அரைப்பங்கு பிரிக்கப்படாதது.

3. நவாலியில் இருக்கும் காக்காசிஎன்னும் காணி நில. பா. 4, குளி $15\frac{1}{8}$-உம், வீடும், எல்லை வடக்குப்பக்கத்தில் பங்குக்கிணறும். எல்லை: கிழக்கு — தவசிருமனின் ஆதனம். வடக்கு — நாச்சிமார்கோவில். மேற்கு — சோமசுந்தரத்தின் ஆதனம். தெற்கு — ஒழுங்கை.

இ. கனகரத்தினம்,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.

நம். 35, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.


## நன்றியறிந்த தோத்திரம்

திருஇருதயத்தின் இரக்கத்தினாலும் பரிசுத்த சதாசகாயமாதா, கோடிஅற்புதராகிய அர்ச். அந்தோனியார் இவர்களின் மன்றாட்டினாலும் என்மனைவிக்கு உண்டானவருத்தம் சுகமானது. இன்னும் நற்சுகம்கிடைக்க அனுக்கிரகம் செய்யும்படி வேண்டிக்கொள்கிறேன். பிரசுரிக்கக் காலதாமதமாகியதற்கு மன்னிப்புக்கோருகிறேன்.

ஊறணி. ஓர்பக்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

## பதினொருபேர் ஆசிரியைகள்

நயினாதீவில் ஒரேயொரு அரசினர் மகாவித்தியாலயம உள்ளது. இதில் தற்போது நான்குஆசிரியர்களும், பதினொரு ஆசிரியைகளும் கடமையாற்றுகின்றனர். அதனால், கல்வி வளர்ச்சியைப் பேணும்பொருட்டு ஆசிரியைகளில் பலரை உடனடியாகப் பிறவிடங்களுக்கு மாற்றிவிட்டு, அவர்களிடமாக ஆசிரியர்களை நியமனஞ் செய்யுமாறு நயினாதீவுக் கிராமச்சங்க தலைவர் கல்விப்பகுதிக்கும், தீவுப்பகுதி எம். பி. அவர்களுக்கும் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

## வேலையற்றோர் தொகை

தொழிற்பகுதி வெளியிட்டுள்ள 'கெசற்'றின்படி, சென்ற 1961-ம் ஆண்டு ஐப்பசிவரையிலே இலங்கையில் 1,47,000 பேர் வேலையற்றிருந்தனர். நாட்டின் பல்வேறு இடங்களிலுமுள்ள வேலைதேடிக்கொடுக்கும் இருபது காரியாலயங்களிலிருந்து இந்தப் புள்ளிவிபரம் சேகரிக்கப்படலாயிற்று. கடந்தஐப்பசியிலே 319ஆண்களுக்கும், 25பெண்களுக்கும்வேலைதேடிக்கொடுக்கப்பட்டதாம்.

## வானொலி ஊழியர் கைது

இலங்கை வானொலியின் ஒலிபரப்புக் கருவிகள்சில சேதப்படுத்தப்பட்டதன் விளைவாய் எட்டுத் தொழில்நுட்ப உதவியாளர் கைதுசெய்து காவலில் வைக்கப்பட்டிருப்பதாக அரசாங்க தகவற்பகுதி அறிவித்துள்ளது. மேலும், 4-ந் திகதியன்று முன்னறிவித்தல் கொடாது வேலைக்குப்போகத் தவறியதற்காக வானொலியைச்சேர்ந்த 107 தொழில்நுட்ப ஊழியருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டிருக்கிறது. அன்று வேலைக்குவாராததற்குத் தகுந்த காரணம் காட்டத்தவறினால் அவர்கள் வேலையிலிருந்து விலகிக்கொண்டதாகக் கருதப்படுமென்று அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## எதிர்பாராத லொறிவிபத்து

கொழும்பிலே ஸ்கின்னேஸ்வீதியிலே சென்ற வெள்ளிக்கிழமை மாலை லொறிஒன்று 'ரக்ஸி'க் காரொன்றுடன் மோதிவிட்டுப் பின்னர் அங்குள்ள இரும்புக்கடைமீது மோதியதன்விளைவாக அந்தக் கடைக்கு முன்னால் மை பூசிக்கொண்டிருந்த ஒருவர் கடைச் சுவருக்கும், லொறிக்குமிடையே அகப்பட்டு நசுங்குண்டு அந்த இடத்திலேயே உயிர்துறந்தார். அப்போது வீதியின் நடைபாதையால் நடந்து போய்க்கொண்டிருந்த பத்துவயதுப் பாடசாலைச்சிறுவனும் இந்த விபத்தில் சிக்கி உயிர்மாண்டான். லொறியின் சாரதியும், கிளீனரும் உட்பட மூவரைக் கடைக்குள்இருந்தவர்கள் லொறியின் கீழிருந்து வெளியே இழுத்தெடுத்தனர். மூவரும் அபாயகரமான நிலைமையில் ஆஸ்பத்திரியிலே அனுமதிக்கப்பட்டார்கள்.

## மன்னாரில் காணிக்கச்சேரி

மன்னார்மாவட்டத்திலே வெள்ளாங்குளப் பகுதிக்கெனச் சென்ற5-ந்திகதியன்று நடத்தப்பட்ட காணிக்கச்சேரி முக்கியமுடையதாயிற்று. சுமார் 200பேரைத்தெரிந்து காணிகொடுப்பதற்காக நடத்தப்பட்ட இந்தக்கச்சேரிக்கு இலங்கையின் பலவேறிடங்களிலுமிருந்து சாதிசமயபேதமில்லாது 1,200பேருக்குமேற்பட்டவர்கள் மன்னார்க்கச்சேரிக்கு நேர்முகமாகச் சென்று தங்கள்பெயர்களையும், செலவிடும் பணத்தைப்பற்றிய விபரங்களையும் பதிவுசெய்திருக்கிறார்கள்.

## உவர்நிலமும் தக்காளியும்

தொண்டமானாற்றுக் கடலேச் சுற்றிவரவுள்ள உவர்நிலத்தில் தக்காளிச் செய்கை நடத்துவதில் இசிறவேல் நாட்டு நிபுணரின் ஆலோசனை பெறப்படவிருக்கிறது. அந்நாட்டிலே உவர் நிலத்தில் தக்காளிச்செய்கை அதிகம் நன்றாக நடைபெற்றுவருகிறது. அங்கு கையாளப்படும் முறையை இங்கும் கையாண்டு ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் தக்காளிச்செய்கை நடத்துவதற்கான திட்டங்கள் செய்யப்படவிருக்கின்றன. இஸ்ரேயல் நாட்டு நிபுணர் ஒருவர் இம்மாதம் 19-ந் திகதி யாழ்ப்பாணம் வரவிருக்கின்றார். இவருடன் தொண்டமானாற்றுக் கடலேரித் திட்டத்திலே தக்காளிச்செய்கை நடத்துவதற்கான ஆலோசனை செய்யப்படும். இவர் அப்பகுதியைச் சென்று பார்வையிடவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## தவறிவிழுந்த பஸ்பிரயாணி

கிளிநொச்சி உருத்திரபுரவாசியான 22 வயதுடைய எஸ். பத்மநாதன் என்பவர் சென்ற சனிக்கிழமை யாழ்ப்பாணத்திலிருந்து பஸ்ஒன்றிலே வவுனியாவுக்குப் பிரயாணஞ்செய்தபோது விபத்துக்குள்ளாய் இறந்துபோயினர். கனகராயன்குளத்திலே பஸ் நிறுத்தப்படுமுன் அதிலிருந்து அவர் இறங்க எத்தனித்தபோது தவறி விழுந்து அதனால் நசுங்குண்டு மரணமாயினர்.

## ஒருநாள் சம்பளவெட்டு

இம்மாதம் 5-ந் திகதி வெள்ளிக்கிழமை லீவுபெறாமல் வேலைக்கு வாராதவர்களும், அங்ஙனம் வாராததற்குத் திருப்திகரமான விளக்கம் கொடாதவர்களுமான அரசாங்க ஊழியர்களுக்கு அன்றையதினச் சம்பளத்தை வெட்டும்படியாகத் திறைசேரியின் உதவிக் காரியதரிசியிடமிருந்து உத்தரவு பிறந்திருக்கிறது. மேலும் இந்த ஊழியர்களுக்கு முதலாவதுவாரச் சம்பள முற்பணம் கொடுக்கலாம்; ஆனால், வழமையாகக் கொடுபடும் சம்பளத்தில் 20சதவிகிதத்திற்குமேல் இருக்கப்படாது; மாதமுடிவிலே தைமாதச்சம்பளம் கொடுபடும்போது வேலைநிறுத்தத்தில் கலந்துகொண்ட ஊழியரிடமிருந்து 5-ந் திகதிச் சம்பளம வெட்டப்பட்டிருக்கிறதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டுமென்றும் உத்தரவாகியிருக்கிறது.

## இரண்டாவது வைத்திய கல்லூரி

போராதனையிலே கட்டப்பட்டுள்ள இரண்டாவது வைத்தியகல்லூரிக்குத் தெரிவுசெய்யப்பட்ட ஆண்களும், பெண்களுமான 103வைத்தியமாணவர்களும் சென்றவெள்ளிக்கிழமை அங்குபோய்ச்சேர்ந்து தங்கள்பெயர்களைப் பதிவுசெய்துகொண்டார்கள். இவர்களில் ஆண்கள்71பேர், பெண்கள் 32பேர். கல்லூரியின் கட்டடவேலைகள் ஏறக்குறையப் பூர்த்தியடைந்துவிட்டன. ஆண்கள் விஜயவர்த்தன விடுதியிலும், பெண்கள் இராமநாதன், ஹில்டாஒபெசேகராவிடுதியிலும் தங்குவார்கள்.

## பதில்அசைஸ் கமிஷனர்

சுப்பிறீங்கோட்டு உபநீதியரசரான திரு. ஈ. எச். ரி. குணசேகரா லீவிலே சென்றிருப்பதால் அவரிடமாக அசைஸ் கம்மிஷனர் திரு. கிங்ஸிலி ஹெறூற் பதில்உதவிநீதியரசராக நியமிக்கப்பட, இவரிடமாகப் பதில்அசைஸ்கம்மிஷனராக யாழ்ப்பாண மாவட்டநீதிபதி திரு. என். கிருஷ்ணரத்தினம் நியமனம் செய்யப்பெற்றிருக்கின்றார்.

# வெளிநாட்டுச் செய்திகள்

● பாதாள வெங்கீர்க்குழாய்களை அமைத்து மஸ்கோநகரம் முழுவதற்கும் காங்கைஉண்டாகச்செய்து மாரிகாலக்குளிரை அடக்குவதற்கென்று ஒருசோவியற் விஞ்ஞானியான இவான் சஸ்றீவ்எனும் எஞ்ஜினியர் திட்டமிட்டு வருகின்றார். இந்தவெங்கீர்க்குழாய்களை அமைக்கப் பெருந்தொகைப்பணம் செலவுசெய்யவேண்டியிருந்தாலும் குறுகியகாலத்தில் அப்பணத்தை மீட்டுக் கொள்ளலாம்.

● இந்தியாவிலே உத்தரப்பிரதேசத்தில் சென்றமார்கழி 17-ந்திகதியிலிருந்து அம்மாதஇறுதிவரையிலே இருவாரங்களிலும் முன்னொருபோதுமே இல்லாதவிதமாய் உண்டான பனிக்குளிரினால் 446பேரும், 27,889 ஆடுமாடுகளும் இறந்திருப்பதாகவும், அங்கு ஹரோடிமாவட்டந்தான் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டதாகவும் அறிக்கையிடப் பட்டிருக்கிறது.

● உலகிற்குத் தேவைப்படும் தேயிலையிலே 55 சதவிகிதத்தை இந்தியாவும், இலங்கையும் உற்பத்தி செய்கின்றன என்று அமெரிக்க அரசாங்க விவசாயப்பகுதி அறிக்கையிட்டிருக்கிறது. இந்தத்தொகை 1961 – 62-ம் ஆண்டிலே 212 கோடியே 30 இலட்சம் றுத்தலாக அதிகரிக்குமென்றும் அது குறிப்பிட்டுள்ளது.

● முந்திய வருடங்களிலும்பார்க்கச் சென்ற 1961-ம்ஆண்டிலே அதிகமான கம்யூனிஸ்த கிழக்குஜேர்மனியர் பேர்ளின் குறுக்குமதிலைத் தாண்டிச் சுதந்திர மேற்கு ஜேர்மனியில்போய் அடைக்கலம் புகுந்துள்ளனர். 1960-ம் ஆண்டிலே 2இலட்சம் கிழக்குஜேர்மனியரும், சென்ற 1961-ம்ஆண்டிலே 2இலட்சத்து 7ஆயிரம் கிழக்குஜேர்மனியரும்போய் அடைக்கலம் புகுந்துள்ளார்கள்.

● சமீபகாலமுதல் மேற்குஜேர்மனியர்களின் அரசிஉணவுப்பாவனை அதிகரித்துக்கொண்டு வருகிறது. அரிசியாலான உணவுப்பண்டங்களை விருந்துகளிலும், விசேஷதினங்களிலும் அவர்கள் உபயோகித்துவருவதே இதற்குக் காரணம். பர்மா, சியம், ஜாவா, கரோலினாமுதலாம் நாடுகளிலிருந்து 1961-ம் ஆண்டிலே 1,11000 தொன் அரிசி அங்கே இறக்குமதிசெய்யப் பட்டிருக்கிறது.

● கம்யூனிஸ்த கிழக்குஜேர்மனியிலிருந்து சென்ற மார்கழிமாதத்திலே 2,420 ஜேர்மனியர் தப்பியோடிச் சுதந்திர மேற்கு ஜேர்மனியில் போய் அடைக்கலம் புகுந்திருக்கிறார்கள். இவர்களிற் சிலர் எல்லைக் காவலர்களை அடித்துத்தள்ளிவிட்டுக் கிழக்குஜேர்மனியைக் கடந்துசென்றார்கள்.

● அமெரிக்க இராணுவபலத்லைதப் பதினாறு நிரந்தர படைவகுப்புகளாலே அதிகரிக்கச்செய்யுமுகமாக உடனடியாகத்தானே இரு புதியபடைவகுப்புகளை ஆக்குமாறு அமெரிக்க ஜனாதிபதி கென்னடி சென்ற புதன்கிழமை உத்தரவு பிறப்பித்திருக்கிறார். பேர்லின் நெருக்கடி காரணமாக இராணுவ சேவைக்கு அழைக்கப்பட்ட இரு படைவகுப்புகளினிடமாக இப்புதிய இரு படைவகுப்புகளும் இருந்துவரும்.

## விசாரணை செய்யவேண்டும்

சென்றவருடம் சித்திரை17-ந்திகதியன்று அவசரகாலச்சட்டம் பிரகடனஞ்செய்யப்பட்டதுமுதல் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே இராணுவத்தினர் நடந்துகொண்ட விதத்தைப் பற்றி விசாரணைசெய்ய விசாரணைக்கமிஷன்ஒன்றை அரசாங்கம் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளும் பிரேரணைஒன்றைத் தாங்கள் சனப்பிரதிநிதிகள்சபையிலே கொண்டுவரப் போவதாகச் சாவகச்சேரிஎம். பி. திரு. வி. என். நவரத்தினம், உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், கிளிநொச்சிஎம். பி. திரு. ஏ. சிவசுந்தரம் ஆகியோர் முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார்கள்.

## நெற்காணிகள் பற்றிய விபரம்

இலங்கை முழுவதிலுமுள்ள நெற்காணிகளின் விஸ்தீரணத்தையும், அவற்றின் விளைவுபற்றிய புள்ளிவிபரங்களையும் திட்டவட்டமாக எடுக்குமாறு காணி – விவசாய மந்திரிகாரியாலயம் அரசாங்க அதிபர்களுக்கும், இறைவரி உத்தியோகஸ்தர்களுக்கும் அறிவித்திருப்பதாகத் தெரியவருகிறது.

## பஸ்களுக்கு நாசவேலை

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிலியந்தலைடிப்போவில் சென்ற வியாழக்கிழமை இரவு 50 பஸ்களின் பல்வேறு இயந்திரபாகங்கள் அகற்றப்பட்டமையால், அவைகளை மறுநாள் வெளியே எடுத்துச்செல்ல முடியவில்லையென்றும், இது ஒரு நாசவேலையென்றும் அச் சபைத்தலைவர் தெரிவித்திருக்கிறார். இது சம்பந்தமாய்ச் சபை ஊழியர் மூவரைப் பொலிசார் கைதுசெய்து காவலில் வைத்திருக்கின்றனர். இந்தநாசவேலையில் உடந்தையாயிருந்தார்களெனச் சந்தேகிக்கப்படுகின்ற மற்றும் பதினாறுபேர்மீது நடவடிக்கை எடுக்கப்படும்போல் இருக்கிறது. இதுபற்றி விசாரணை நடத்துமாறு இரகசியப்பொலிசரைக் கேட்டுக்கொண்டதின்பேரில் பூரண விசாரணை நடைபெற்றுவருகிறது. இது மிகவும் பாரதூரமான விஷயம்; ஆகவே, இதில் ஈடுபட்டவர்கள்மீது அரசாங்கம் கடும்நடவடிக்கை எடுக்குமென்று [illegible]சேவைகளின் மந்திரி தெரிவித்திருக்கின்றார்.

● தனதுஇனத்திலே உலகில் அதிகம்தீவிரமாக வேலைசெய்யுமென நம்பப்படுவதான அச்சியந்திரம் ஒன்று இங்கிலாந்திலே ஸரூசன் – ஹென்ஷோ கம்பெனியால் பிறிஸ்ரல் எனுமிடத்திலே செய்யப்பட்டுவருகிறது. இது நிமிஷம் ஒன்றுக்கு இரண்டாயிரம் அடி நீளமான கடுதாசியை அச்சிடக்கூடிய வேகமுடையதாயிருக்குமென்று சொல்லப்படுகிறது.

● இந்தோனீஷிய ஜனாதிபதி சுகார்னோவைக் கொலைசெய்தற்கான ஒரு சதிமுயற்சி சென்ற 8-ந் திகதி நடைபெறலாயிற்று. அன்று ஓர் எறிகுண்டு வீச்சிலிருந்து அவர் மயிரிழையில் உயிர்தப்பினர். ஆனால், அந்த எறிகுண்டு அவருக்குப் பின்புறமாகப் பத்துயார் தூரத்தில் போய் வெடித்தபோது மூவர் இறக்க, 28 பேர் காயமுற்றனர். அவரைக் கொலைசெய்ய இதுவரை நடைபெற்றுள்ள மூன்றாவது சதிமுயற்சி இதுவாகும்.

● சந்திரனுக்கு மனிதன் ஒருவனை அனுப்பிவைப்பதற்காக வானவெளிக் கப்பலைத் தயாரிக்க அமெரிக்கா 250 கோடிடலர் செலவிடப்போவதாகப் பிரபல அமெரிக்க வானவெளி விஞ்ஞானியான டக்றர் வெர்னர் வான் பிரான் தெரிவிக்கின்றார். 1965-ம் ஆண்டிலே இந்தக்கப்பல் தயாராகிவிடுமென்றும், அதன்மேல் இதுபோன்ற வானவெளிக் கப்பல்களைத் தயாரிக்கப் 15 கோடி டலர் செலவுதான் ஏற்படுமென்றும் அவர் கூறுகின்றார்.

● நியூயோர்க்நகரில் தானாக இயங்கும் முதலாவதுபுகையிரதம் இப்போது ஓடிக்கொண்டிருக்கிறது. இதன்பாதை நிலத்தின்கீழ் அமைந்திருக்கிறது. நியூயோர்க்நகரைப் பார்க்கச் செல்லுகிறவர்கள் இந்தப் புகையிரதத்தில் ஒருமுறையாவது பிரயாணஞ்செய்யத் தவறுவதில்லையாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### தை மாதம் — 1962

| | | | |
|---|---|---|---|
| 14 | ஞா. | **பிரத். பின் 2-ம் ஞாயிறு** (வி. ம) | ப. |
| 15 | தி. | முதல்வனவாசியான அர்ச். சின்னப்பர் (அர்ச். பௌரியார் ஞா.) | வெ. |
| 16 | செ. | அர்ச். மார்சலஸ் | சி. |
| 17 | பு. | அர்ச். வனத்து அந்தோனியார் | வெ. |
| 18 | வி. | காலதினம் (ஞாயிறுபூசை; அர்ச். பிறிஸ்கா ஞா) | ப. |
| 19 | வெ. | காலதினம் (ஞாயிறுபூசை, அர்ச். மாறியஸ், மார்த்தா தோழர் ஞா. அர்ச். கனியூட் ஞா. | ப. |
| 20 | ச. | அர்ச். பபியாரும், செபஸ்தியாரும். | சி. |

சத்திய வேத
பாதுகாவலன்
1962-ம் ஆண்டு
தைமாதம் 14-ந்திகதி

## தமிழினத்தின் வருகாலம்

யுத்தபேராபத்தை விளைக்கக்கூடிய பெரும்நெருக்கடிகள் ஒன்றின் பின்னொன்றாக இருமுறைதோன்றிய போதிலும் கடந்துபோன 1961-ம் ஆண்டு ஏதோஒருவிதமாய் அவை களைச்சமாளித்து ஒருவாறுஉலகில் சமாதானம்நிலவச்செய்தது. பேர்ளின்பிரச்சினைபற்றிய வல்லரசுகளின்பேச்சுகளோ என்னதான் வந்தபோதிலும் அப்பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்கவேண்டுமென்ற கருத்தை முற்றாகக் கைவிடாமலும், ஒன்றுக்கொன்று பிடிகொடாமலும், ஆக்கிரமிப்பில் இறங்காமலும் நடைபெற்றுக்கொண்டு வருவதாலே இந்தப்பிரச்சினை என்றோ ஒருநாள் தீர்க்கப்படுமென்று நம்பியிருக்கலாம். ஆயுதக்குறைப்புப் பற்றிய பேச்சுகளிலே பலஅம்சங்களில் வல்லரசுக்கோஷ்டிகளிடையே இணக்கம் காணப்படுவதும், அணுக்குண்டுப்பரீட்சைத் தடைப்பிரச்சினைபற்றிய பேச்சுவார்த்தைகள் திரும்பஆரம்பமாகியிருப்பதும் ஆதியவெல்லாம் உலகசமாதானத்துக்குப் பங்கம்விளையாது தப்பிக்கொண்டு கடந்துபோன 1961-ம் ஆண்டின் தொடர்நிகழ்ச்சிகளே. நெருக்கடிகள்பல நிறைந்திருந்த போதிலும் உலகசமாதானத்தின் அத்தியாவசியகத்தை உலகமக்கள் நன்குணரச் செய்துவிட்டபெருமை அதற்கேஉரியது. அந்தஉணர்வைச் செயலளவிலே சாதித்துவைக்க இந்தஆண்டுஉதவினாலோ!

நிற்க, உலகின் பலநாடுகளிலும் போலவே எமதுஉள்நாட்டிலும் நெருக்கடிகள்பலதோன்றியிருப்பது வருந்தத்தக்கது. வேலைநிறுத்தங்கள் திரும்பவும் தலைகாட்டியிருக்கின்றன. இவைகள் கடந்தகாலங்களில் போன்று நடைபெறாது பலம் பொருந்திய மூன்றுஸ்தாபனங்களாலே வழிநடத்தப்பட்டு மும்முரமாகநடைபெறுகின்றன. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கமோ நாட்டின்பல்வேறு பிரச்சினைகளையும் தீர்த்துவைக்கச் சாமர்த்தியமற்றதென்று தன்னைத்தெளிவாகக் காட்டிக்கொள்ளுகின்றது. பங்குனிமாதப் பொதுத்தேர்தலிலே படுதோல்வியடைந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் வெற்றிகரமாகச் சமரசம் பேசித் தேர்தல்பொருத்தனை ஒன்றைச்செய்து அடுத்ததேர்தலிலேஅது பெருவெற்றிபெற வழிபண்ணிய லங்கா சமசமாஜகட்சியானது. அத்தேர்தலின்விளைவாய் அரசாங்ககட்சி மிகப்பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுப் பலத்துக்கொண்டபின் தன்னைக் கைநெகிழ்ந்து விட்டதெனக் கருதியதாலோ, அன்றேல் இதுவரை தனதுஎண்ணம் கைகூடவில்லையென்று கருதியமையாலோ இன்று அரசாங்கத்தை அதிகம் பலமாகக் கண்டனம்செய்யும் கட்சியாக மாறிக்கொண்டது. இந்தநிலையிலே எமதுநாட்டின் எதிர்காலம் என்னவாகுமோவென்று முன்னதாக அறிந்துசொல்வது கஷ்டம். ஆயினும், ஒருகாரியம் மாத்திரம் நிச்சயமாகக் காணப்படுகின்றது. இந்நாட்டின் பாராளுமன்றஆட்சிபற்றியதே அதுவாகும். இன்றைய ஜனநாயக ஆட்சிமுறையின்காலம் இறுதிகாணுமோ! பாகிஸ்தானில் ஒரு ஆயுப்கானைப்போலும், யூகோசிலேவியாவில் ஒரு ரிற்றோவைப்போலும், கியுபாவில் ஒரு காஸ்ரோவைப்போலும் இங்கும் ஒரு சர்வாதிகாரிதோணுவாரோஎன்றுதான் சிந்திக்கவேண்டியிருக்கிறது.

எதிர்க்கட்சிகள் குளத்தைக்கலக்கொண்டிருக்க, அரசாங்கம் கலங்கிக்கொண்டிருக்க, இந்நாட்டின் சரித்திரத்தில்முன்னர் என்றுமேகண்டிராத மிகப்பெரும் பொருளாதார வீழ்ச்சி இன்று ஏற்பட்டுக்கொண்டிருக்க, சமுதாயத்திலே கவலைதரும் சூழ்நிலைஒன்று உருவாகிக்கொண்டிருக்க, இந்தநிலைமையிலே தமிழ்மக்களின்கதியென்ன? உலகசந்தையிலே தேயிலை, றப்பர், தெங்குப்பொருட்கள் ஆதியவற்றின்விலைகள் வீழ்ச்சியுற்றமையால் நாட்டின் பொருளாதாரமும், அரசாங்கத்தின் வருமானமும் பாதிக்கப்பட்டிருக்கும்போது எதற்கும் அரசாங்கத்தின் உதவியை எதிர்பாராது "தன்கையே தனக்குதவி" என்ற மணிமொழியை மனதிற்கொண்டு, நமதுசுயமுயற்சியிலே நம்பிக்கைவைத்து நமது சுயதேவைகளை நாமேபூர்த்திசெய்ய முயலவேண்டும். அரசாங்கத்திலே உத்தியோகங்களை எதிர்பார்ப்பதை விடுத்துக் கமத்தொழில், கைத்தொழிலாகிய இரண்டையும் இருகண்களாக கருத்திற்கொண்டு அவற்றில் ஈடுபட்டுப் பொருளாதாரத்தைப் பெருக்கிக்கொள்ள முன்வரவேண்டும். நாம் சுயமரியாதையுடன் வாழச் சுயமுயற்சியில் நம்பிக்கைகொள்ள வேண்டும். தமிழினத்தின் முன்னேற்றத்திற்கும், நல்வாழ்விற்கும் இதுவே தகுந்தவழியாகும். முயற்சி திருவினையாக்கும் என்க.

## செப அப்போஸ்தலசபை வெளியீடு

### தைமாதம்

**பரிசுத்த பாப்பானவர் இம்மாதத்துக்கென நியமித்த கருத்துக்கள்**

**பொதுக்கருத்து:** திருச்சங்கத்துக்காகிய சகல ஆயத்தங்களும் நம்மாலியன்ற கவனசிரமத்துடன் நடந்துவரத்தக்கதாக வேண்டிக்கொள்வது.

**வேதபோதககருத்து:** திருச்சங்கமானது பரிசுத்த சுவிசேஷத்தின் உண்மைப் பிரகாசக் கதிர்களைக் கிறிஸ்துவை அறியாத்தேசங்களுடேயும் பரப்பத்தக்கதாக மன்றாடிக் கொள்வது.

## சிந்தனைக் கதிர்

### 7

"உலகின் ஒளி" என்ற தமது மிகப்பிரசித்திபெற்ற ஓவியத்தை வரைந்தபின்னர் நண்பர்களை அழைத்துக் காட்டினார் கோல்மன் கன்ற். சிறந்த சித்திரவிற்பன்னர் அவர்.

நண்பரொருவர் கூறினர், கோல்மன், உங்கள் ஓவியத்தில் மாபெரும் குற்றமொன்றுளது. கிறிஸ்து கதவண்டை அதைத் தட்டியவண்ணம் நிற்பதாகச் சித்திரித்துள்ளீர். ஆயின், இக்கதவுக்குத் திறப்புக் குமிழியை இட மறந்துவிட்டீர். கிறிஸ்து உள்ளே செல்வதற்கு வழியேது?

இல்லை நண்பரே. யான் தவறேதும் இழைக்கவில்லை. உலகவழக்கத்தையே குறிப்பிட்டுள்ளேன். இக்கதவு மனிதஇருதயத்தை உவமிக்கின்றது. அது தானாகவே திறக்கவேண்டும். எந்த இருதயத்திலும் கிறிஸ்து பலவந்தமாகச் செல்லவேமாட்டார் எனப்பதிலளித்தார் ஓவியநிபுணர் கோல்மன்.

எங்கள் இதயக்கதவுகளைத் தட்டியவண்ணமே காத்துநிற்கிறார் உலகஇரட்சகர். கதவைத்திறந்து அவரை வரவழைப்பது எமதுகரங்களில் தங்கியுள்ளது. அவரை எம்முடன் ஒன்றிக்கச் செய்வதற்குத் திவ்வியநன்மை உதவுகின்றது. அடிக்கடி இத்தேவதிரவிய அனுமானத்தைப் பெறுவதன்மூலம் இத்தெய்வீக விருந்தாளியை எமது இதயங்களில் நிரந்தரமாக்கிவிடலாம்.

நான் எப்போதும் உங்கள்மத்தியில் வாசம்செய்வேன் (மத். 28: 20)

சா. பெ.

## கிறிஸ்தவ ஒற்றுமை அட்டகம்

(தை 18-ந் திகதி—தை 25-ந் திகதிவரை)

### ஒவ்வொருநாளுக்கும் குறிக்கப்பட்ட கருத்துக்கள்

தை 18. வெளியேயுள்ள ஆடுகள் அனைத்தும் ஓரேமேய்ப்பனாகிய இராயப்பரின் மந்தையில்வந்து சேரும்படி.

தை 19. கிழைத்தேசப் பிரிவினைச் சபையாரெல்லோரும் அப்போஸ்தொலிக்க ஸ்தானத்துடன் ஒற்றுமைப்படும்படி.

தை 20 புரொட்டஸ்தாந்த மார்க்கத்தார் திருச்சபையின் ஐக்கியத்திற்குத் திரும்பிவரும்படி.

தை 21. இந்துமதச் சகோதரர் மனந்திரும்பும்படி.

தை 22. முஸ்லீம்சகோதரர் மனந்திரும்பும்படி.

தை 23 தவறிப்போன கத்தோலிக்கரெல்லோரும் திரும்பிவந்து தேவதிரவிய அனுமானங்களைப் பெற்றுக்கொள்ளும்படி.

தை 24. யூதர்கள் மனந்திரும்பும்படி.

தை 25. **அர்ச். சின்னப்பர் மனந்திரும்புதல் திருநாள்:** உலகம் முழுவதும் கிறிஸ்துஇராசாவின் ஆட்சிக்குட்படும்படி.

### கிறிஸ்தவ ஒற்றுமைஅட்டகத்தில் சொல்லத்தகும் செபம்

"அவர்கள் எல்லோரும் ஒன்றாய் இருக்கவும், பிதாவே! தேவரீர்என்னை அனுப்பினீர்என்று உலகம் விசுவசிக்கவும், நீர் என்னிலும், நாம் உம்மிலும் இருக்கிறதுபோல அவர்களும் நம்மிடத்தில் ஒன்றாய்இருக்கவும் வேண்டிக் கொள்கிறேன்."

**முதல்வர்:** "நான்உனக்குச் சொல்லுகிறேன், நீ இராயாய் இருக்கிறாய்."

**துணைவர்:** "இந்த இராயின்மேல் திருச்சபையைக் கட்டுவேன்."

பிரார்த்திப்போமாக

ஆண்டவராகிய யேசுக்கிறீஸ்துவே! உங்களுக்கு எனது சமாதானத்தை விட்டுப்போகிறேன். எனது சமாதானத்தை உங்களுக்குத் தருகிறேன் என்று உமது அப்போஸ்தலர்களுக்குத் திருவுளம்பற்றினீரே! எங்கள் பாவங்களைப் பாராதேயும். உமது திருச்சபையின் விசுவாசத்தைப்பாரும். உமது சித்தத்திற்குஏற்ற சமாதானத்தையும், ஒற்றுமையையும் அதற்குக் கொடுத்தருளும். சதாகாலஞ் சீவியரும், இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிறவரே, ஆமென்யேசு.

**மு.** தவறிப்போன சகலரையும் திருச்சபையின்ஒற்றுமைக்குள் திரும்பி அழைக்கவும், அவிசுவாசிகள் அனைவரையும் சுவிசேஷ வெளிச்சத்திற்குக் கொண்டுவரவும் கிருபைசெய்தருள வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்.

**து.** எங்கள் மன்றாட்டைக் கேட்டருளுஞ் சுவாமி.

**மு.** யேசுவின் மதுரமான திருஇருதயமே, எங்கள்மேலும், தவறிப்போன சகோதரர்கள்மேலும் இரக்கமாயிரும். (3முறை)

ஆண்டவராகிய யேசுக்கிறீஸ்துவே! உலகத்தின் இரக்கம்நிறைந்த இரட்சகரே! உமது மந்தையைவிட்டு அலைந்து திரியும் ஆடுகள்அனைத்தையும், ஆத்துமாக்களின் ஆயரும், பரிபாலகருமாகிய உம்மிடம் இழுத்துக்கொள்ளும்படி உம்முடைய திருஇருதயத்தின்பேரால் உம்மைக் கெஞ்சிமன்றாடுகின்றோம். சதாகாலமும் சீவியரும் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிறவரே, ஆமென்.

### குடும்பக்கட்டுப்பாட்டால் யப்பானுக்கு ஆபத்து

சனப்பெருக்கப் பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கமாக 2-ம்உலகமகா யுத்தத்தில் குதித்த யப்பானில், குடும்பக்கட்டுப்பாடு கைக்கொள்ளப்படுங் காரணமாகத் தொழிலாளர் குறைவுப் பிரச்சினை தலைகாட்டியிருக்கிறது.

இரண்டாவது மகாயுத்தத்தின்பின் பரந்து அனுசரிக்கப்பட்ட "குடும்பக்கட்டுப்பாடு" காரணமாக இக்குறைவு ஏற்பட்டிருக்கிறது எனப்பல அரசியல்வாதிகள் கூறுகின்றனர். யப்பானில் சனத்தொகை வளர்ச்சி, உற்பத்தி, விவாகம், மரணம், தேகாரோக்கியம் முதலியவைகளின் புள்ளிவிபரந்திரட்டுவோர் "குடும்பக்கட்டுப்பாட்டினால்" ஏற்பட்டிருக்கும் பிரச்சினைபற்றிப் பெரிதும் கவலைகொள்ளுகின்றனர். பல பத்திரிகைகளும் இதைக் கண்டிக்கத் தொடங்கியிருக்கின்றன.

ஆண்டுதோறும் பிறக்கிற குழந்தைகளின் தொகையைவிட அழிக்கப்படும் சிசுக்களின் தொகைஅதிகம்—2இலட்சம். ஐந்து வருடங்களின்பின் உழைப்போர் தொகை மிகஅரிதாகிவிடும்என எதிர்பார்க்கப்படுகிறது.

கொக்கைடோவில்முன்னர் 60மாணவர் இருந்தவகுப்புகளில் இப்பொழுது சராசரி 25பேர்மாத்திரமுண்டு. சில ஆரம்பப்பாடசாலைகளின் பாலர்கழகம் வெறுமையாய்க் காட்சியளிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்றிராசனங்கள்தரும் செய்தி

(இரண்டாம்பக்கத் தொடர்ச்சி)

### பாண்டியன்தாழ்வில்
### வண. அடிகள் B. A. தோமாஸ் ஓ. எம். ஐ. அவர்களின்
# குருத்துவ தங்கயூபிலி விழா

தோலகட்டி ஆச்சிரமத்தை அறியாதவர்களில்லை. இவ்வாச்சிரமமே கிறீஸ்துவஉலகில் கிழக்குத்தேசத்தில் முதல்முதல் தோன்றியதாகும். 1927-ம்ஆண்டில் ஆரம்பமான இந்த ஆச்சிரமம் இன்றுகொப்பும் கிளையுமாகப்பரந்து பாரதநாடுவரையும் நல் நிழலைக் கொடுப்பதைக் காணும்போது யார்தான் மகிழ்ச்சியும் பெருமையும் கொள்ளாமலிருக்க முடியும். "உன்னைப்போல் உன்பிறனைநேசி" என்னும் பொன்வாக்கை நிறைவேற்றும் இரட்சணியவேலையை மாத்திரம் இது செய்துவருகின்றது. ஆண்டவனை அடையவேண்டிய மக்கள் — அவனடியில் மலரவேண்டியமக்கள் வழிதப்பாது வாழ்வதற்காக வேண்டிக்கொள்வதே இதன் சேவையாகும். சாதாரணமாக எல்லாராலும் கைக்கொள்ள முடியாத தவத்தையும் செபத்தையுமே இவர்கள் தங்கள் ஆயுதங்களாகக் கைக்கொண்டுள்ளார்கள். உலகம், சரீரம், பசாசு என்பவைகளைக் கொன்று குவிக்கும் வச்சிராயுதங்கள்தான் இவைகள். இவர்கள் ஓய்ந்திருப்பதில்லை, இரவும் பகலும் ஒன்றுதான். உணவும் பசியும் ஒன்றுதான். சுகமும்பிணியும் ஒன்றுதான். முழந்தாளிட்டநிலை, விரித்தகை, குனிந்ததலை, விழித்த கண்கள், இப்படியே இருபத்திநாலு மணித்தியாலங்களும் முறைமுறையே செபத்தை ஓதியபடியும் தவத்தைப் புரிந்தபடியும் இருக்கின்றார்கள். இவ்வாறு தங்களை முற்றாகஅழிக்கும் பரித்தியாகத் தொழிலின் பெருமையை எம்மால் நினைக்கவும் சொல்லவும் முடியுமா? எங்கும் மின்சாரவெளிச்சம் மின்னுவதற்கு ஏதோவொரு இடத்திலுள்ள மின்சாரநிலையமே காரணமாகும். அதுபோலக் கிறிஸ்துவ இரட்சணிய வேலை கனிசித்தியுடன் இயங்குவதற்கும், கர்த்தரின் படைப்புக்கள் கர்த்தரையடைவதற்கும் இதுபோன்ற ஆச்சிரமங்களே முதற்காரணமாகும்.

இத்தகைய சிறப்புப் பொருந்திய தோலகட்டி ஆச்சிரமத்தை அடியிட்டவரும், பாண்டியந்தாழ்வை ஜெனனபதியாகக் கொண்டவருமான வண. அடிகள் பி. ஏ. தோமாஸ், ஓ. எம். ஐ. அவர்களின் குருத்துவ தங்கயூபிலியைக் கண்ட பாண்டியந்தாழ்வுமக்கள் கொண்ட ஆனந்தபரவசம் எல்லையற்றதென்பதை இம்மாதம் நடந்தேறிய யூபிலிச்சோபனக் கொண்டாட்டமே மிகமிக விளக்கமாக எடுத்துக்காட்டியது.

சென்றஞாயிறுவாரம் 7-ந்திகதி பிற்பகல் நாலுமணியிருக்கும், நட்டுவமுட்டுநாதசுர வாத்தியங்கள் முழங்க, வெடிகள் அதிர, மணிகள் ஒலிக்க, தோரணதுவசங்களாட, மக்கள்கீதங்கள்பாட மழைவெள்ளம்போல் சனவெள்ளம்சூழ வண. அடிகள் பி. ஏ. தோமாஸ், ஓ. எம். ஐ. அவர்கள் பாண்டியந்தாழ்வு புனிதஅன்னம்மாள் கோவிலை வந்தடைந்தார்கள். 'தெதேயும்' என்னும் நன்றியறிதல் கீதம்பாடப்பட்டதும் தேவநற்கருணை ஆசீர்வாதம் நடந்தேறியது. அவ்வேளை வண. அடிகள் பி. தியோகுப்பிள்ளை, ஓ. எம். ஐ. அவர்கள் குருத்துவத்தின் மகத்துவத்தைப்பற்றிப் பேசும்போது பின்வருமாறு குறிப்பிட்டார்கள்.

"குருத்துவம் ஒரு திருப்பதவி. தேவதூதர்களுக்கும் எட்டாத ஒரு புனிதபதவி. கிறிஸ்துநாதரே புரிந்த சேவையையேகுரு செய்கின்றார். 'உன்பாவங்கள் மன்னிக்கப்பட்டன. உன்கட்டிலைத் தூக்கிக்கொண்டுபோ' என அவன் கட்டிலைத்தூக்கிக் கொண்டு போனான். 'இது என்சரீரம் இது என் இரத்தம்' என, அப்பம்சரீரமாகவும் இரசம் இரத்தமாகவும் மாறிவிட்டன. இவைகள் கிறிஸ்துவின் திருவாக்குகள். கிறிஸ்துவின் அதிகாரத்தோடு இவர்கள் பேசுகின்றார்கள். அன்று நடந்த இவ்வற்புதங்கள் இன்றும் குருக்களால் நிறைவேற்றப்படுகின்றன. இவர்கள் கிறிஸ்து என்பதற்கு என்ன சந்தேகமிருக்கின்றது. ஆன்மாக்கள்மேல் அதிகாரம் செலுத்தும் அரசஆட்சிதான் இது. அழியும் சரீரஆட்சியல்ல. நித்தியமோட்சத்தைச் சுகிக்க வழிவகுக்கும் அமுத ஆட்சிதான் இது. இந்தஆட்சியைச் சிறப்புடன் நடத்தும் வண, அடிகள் தோமாஸ் அவர்களோடு ஒன்றித்துத் தேவனுக்கு நன்றியறிந்த வணக்கம் செலுத்துவோமாக. இப்பங்கில் தேவஅழைத்தல்கள் பெருகும்படி மன்றாடுவோமாக"

இதன்பின்பு ஆசிரியர் எஸ். அந்தோனிப்பிள்ளையவர்களால் யூபிலிச்சோபனங்கூறும் வாழ்த்துப்பத்திரம்படித்துக்கொடுக்க, ஆசிரியர் எஸ். சின்னப்புநாயகம் அவர்களால் ஞானப்பூச்செண்டு அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டது. இவர்களைத் தொடர்ந்து ஆசிரியர் திரு. ப அருளானந்தம் அவர்கள் "கண்டுகொண்டோம்" என்னும் பொருள்பட ஒரு சொற்பொழிவு ஆற்றினார்கள். யூபிலிநாயகர் யேசுவின் திருஇருதயத்திலும் மரியாயின் மாசில்லாத இருதயத்திலும் பூரணநம்பிக்கைவைத்து வாழும்படி புத்திமதி கூறித் தமது நன்றியையுந் தெரிவித்தார். அத்துடன் யூபிலிக்கொண்டாட்டம் இனிதே நிறைவெய்தியது.

**யூபிலிநாயகர் பல்லாண்டு வாழ்க:**

# நான் கிறிஸ்துவை எங்கே காண்பேன்?

இ. பேர்னுட்.

பாவத்தால் உருக்குலைந்த உலகை உய்விக்க உதயசோதி தோற்றினார் மாடடையும் தொழுவில். உலக சரித்திரத்தில் இணையற்ற இன்பநிகழ்ச்சி. கிறிஸ்தவராகிய நாம் அவரை இன்று எங்கே காண்போம்? இப்புனித புத்தாண்டில் அனைவரும் தம்மனத்தைத் தட்டிக்கேட்கவேண்டிய கேள்வி இது. "நான் கிறிஸ்துவை எங்கே காண்பேன்?"

மானிடன் தன்னை எங்கும் எப்போதும் காணவேண்டுமெனக் கடவுள் ஆசித்தார். ஆத்துமங்களை அன்பின் பாதையில் கொண்டுசெல்ல பலவேறு தோற்றங்களில் காட்சிதருகிறார். பரமன் பிறந்த பண்டிகையைப் புனித வாழ்விற்குப் பயன்படுத்துவதே உத்தமம். எனவே, நான் என்பிறனில் கிறிஸ்துவைக் காணுகின்றேனு? "என் சிறிய சகோதரர்களாகிய இவர்களுக்குச் செய்தபோது எனக்கே செய்தீர்கள்", 'உன்னைப்போல உன்பிறனைச் சிநேகிப்பாயாக' என்பவை அவர் வாக்கன்றோ! இதையே அவர் அதிகம் விரும்புகிறார்.

நற்கருணையில் நான் அவரைக் காண்கின்றேனு? மானிட தேவன் மனிதன் மேல் வைத்த மாபெரும் அன்பால் தம்மையே உயிர்ப்பலியாகத் தந்தார். "நானே சீவிய அப்பம்", 'என் சரீரத்தைப்புசித்து என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்திய சீவியம் உண்டு. கடைசிநாளில் நான் அவனை உயிர்ப்பிப்பேன்' என்றும் திருவுளம்பற்றியிருக்கிறார். திவ்விய பூசைப்பலிமூலம் நாடோறும் பலிபீடங்களில் கிறிஸ்துநாதர் எழுந்தருளி வருகின்றார். நற்கருணையை நன்மனதுடன் விசுவசித்தால் அவரைக்காண்பது எளிது. இதற்குவழி நற்கருணையை நன்மனதுடன் பெறுதலும், நற்கருணையில் அவரைச் சந்தித்தலுமேயாம்.

கத்தோலிக்க திருச்சபையில் அவரைக் காண்கின்றேனு? கிறிஸ்துவின் வாழ்வின்தொடர்ச்சியே திருச்சபை. "நரகவாசல்கள் அதை மேற்கொள்ளா", 'உலகம் முடிவுமட்டும் உங்களோடிருப்பேன்' என அவரே திருவாய்மலர்ந்தருளினர். எனவே, திருச்சபையில் கிறிஸ்துவைக் காணவேண்டுமாயின் அதன் போதனையை ஏற்றுக் கட்டளைகளை அனுசரித்து, அதன் மேய்ப்பர்களுக்கு அமைந்து நடக்க வேண்டும். "உங்களுக்குச் செவி சாய்க்கிறவன் எனக்குச்செவி சாய்க்கிறன், உங்களைப் புறக்கணிக்கிறவன் என்னைப் புறக்கணிக்கிறன்.' அதன் ஞான மேய்ப்பர்கள் கிறிஸ்துவினிடமாக உழைக்கும் மறு கிறிஸ்துக்கள். கிறிஸ்துவிடம் இருந்துபிரிக்க எம்மைத் திரும்பவும் ஒன்றிக்கிறர்கள். ஆகவே, அவர்களைக் காணும்போது கிறிஸ்துவைக்காண்கிறோம்.

என் கரங்கள் அவரைச்சிலுவையில் அறைவதைக் காண்கின்றேனு? நான் பாவம்செய்யும் ஒவ்வொருமுறையும் அவரைச் சிலுவையில் அறைகின்றேன். அவரை மறுபடியும் யூதருக்குக் கையளிக்கிறேன். எனவே, அவரைத் திரும்பவும் சிலுவையில் அறையாதிருக்கும்பொருட்டு அவரிடம் உதவிகேட்பேன். இவற்றைவிட இன்னும் அநேக வழிகளில் காட்சிதருகிறர். இயற்கையின் இன்பத்தை அனுபவிக்கும்போது இயற்கையை உண்டாக்கிய அவரைக் காண்கிறேனு? வாழ்வின் இன்பதுன்பத்தில் அவரைக் காண்கிறேனு? இன்பத்தால் இறுமாப்படைந்து அவரைக் காண மறந்தேனு? துன்பத்தில் துக்கித்து அவரைத் துதிக்காது விட்டேனு? நாடோறும் கல்வாரியில் அவரைக் காண்கின்றேனு? கல்வாரிப்பலியைத் திவ்விய பூசைப்பலிமூலம் புதுப்பித்துவருகிறர் அன்றோ!

மாட்டுத்தொழுவில் சிலநாட்களுக்கு மட்டும்காணலாம் கிறிஸ்துவை. ஆனல், நற்கருணையிலும், கல்வாரியிலும், திருச்சபையிலும், பிறரிலும், இயற்கையிலும், இன்பத்திலும், துன்பத்திலும் எப்போதும் காணலாம். ஆகவே, கிறிஸ்தவனே! கிறிஸ்துவை எங்கே காண்பாய்? இயற்கையிலா? இன்பத்திலா? துன்பத்திலா? கல்வாரியிலா? நற்கருணையிலா? பிறரிடமா? உன்னுள்ளத்திலா? எங்கே காண்பாய்? இவையாவற்றிலும் அப்படிக் கிறிஸ்துவைக் காண்கிறயா?

# சுன்னுகம் கத்தோலிக்க இளைஞர் மன்றத்தின் விளையாட்டுப்போட்டி

சென்ற 2-1-62 சுன்னுகம் அர்ச். அந்தோனியார் தேவாலய மைதானத்தில் சுன்னுகம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்பட்ட வருடாந்த விளையாட்டுப்போட்டி கழகத் தலைவர் திரு. அந்தோனிப்பிள்ளை அருளப்பு அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

உடுவில் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. தருமலிங்கம் அவர்கள் பேசுகையில்: "இன்று இந்த விளையாட்டுப் போட்டியில் எனக்கு பேசச்சந்தர்ப்பம் அளித்தமைக்காக உங்களுக்கு நான் மிகவும் நன்றியுடையவனுக இருக்கின்றேன். ஒவ்வொரு பெற்றோரும் தம் பிள்ளைகளை மிகவும் சிறந்த நற்பண்புள்ளவர்களாகவும், நல்ல கல்விமான்களாகவும்; பாந்த சேவையாளர்களாவும் உருவாக்கி நாட்டுக்கும், மொழிக்கும், மதத்திற்கும் உகந்த பிரைஜைகளாக்குவதையே ஒவ்வொரு பெற்றோரிடமும் நான் இரந்து விரும்புகிறேன்.

"பிரான்ஸ்தேசத்துவீரன் நெப்போலியன் விளையாட்டுமூலம் தனது வீரபராக்கிரமத்தை உலகுக்குக் காட்டி பிரான்ஸ் தேசத்தையும் அவற்றைச் சுற்றியுள்ள நாடுகளையும் தனது ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவந்து உலகையே ஓர் ஆட்டம் ஆட்டினன். இப்பேர்ப்பட்ட நெப்போலியன் போன்றே இளைஞர்களாகிய நீங்களும் விளையாட்டின்மூலம் எங்களுக்குள் இருக்கும் உயர்வு தாழ்வுகளை நீக்கி எம்நாடும் மொழியும் சிறந்து உலகுக்கு ஒரு கலங்கரைவிளக்குப்போல்இருக்க முயற்சிக்க வேண்டும். அதுவே நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் பெற்றோருக்குச்செய்யும் கடமையாகும்" என்றார்.

பிரான்ஸ்தேசத்தைச் சேர்ந்தவரும், சுன்னுகம் அர்ச். அந்தோனியார் தேவாலயக் கட்டளைக் குருவருமாகிய வண. ஹென்றி ஜெலான்ட் அடிகளார் தமிழில் பேசுகையில்: "பிள்ளைகள் தமது பெற்றோருக்கும், பெற்றோர் தமது பிள்ளைகளுக்கும் தங்கள் தங்கள் கடமைகளைச் சீரியமுறையில் செய்ய வேண்டும். உலகின் எதிர்காலமோ மிகவும் பயங்கரமானகாலம். ஆகவே, பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது உடல், பொருள், ஆவி அத்தனையையும் தியாகம்செய்யத் தயாராக இருக்க வேண்டும். பெரியோர்களையும் அறிஞர்களையும் பிள்ளைகள் கனம்பண்ணுவதே அவர்களின் எதிர்கால வளர்ச்சியின் நல்ல அறிகுறியாகஇருக்கும்" என்று குறிப்பிட்டார்.

உடுவில் கிராமச்சபை சுன்னுகம் சந்தைவட்டார பிரதிநிதி திரு. ஆசீர்வாதம் ஹென்றி அவர்கள்பேசுகையில்: "கத்தோலிக்கர் தமிழுக்குச் செய்த சேவைபோன்றுவேறு எந்தமதத்தைச் சேர்ந்தவர்களும் செய்யவில்லை. வண. வீரமாமுனிவரே முதலில் தமிழில் உரைநடை எழுதியவரும், திருக்குறளை இத்தாலிய மொழியில் மொழிபெயர்த்தவரும் தமிழ்-தமிழ் அகராதியை எழுதி முதல்முதல் தமிழுக்கு சேவைசெய்தவருமாவர். இதற்குமுன் உரைநடை தமிழ்-தமிழ் அகராதி, திருக்குறள் மொழி பெயர்ப்பு வேறு எவரும் செய்யவில்லை.

"நமது இலங்கையில் 37வருடங்கள் சீவித்துத் தமிழிலும், சிங்களத்திலும் 42நூல்களை எழுதியவரும், தமிழுக்கு முழுத்தரிப்பு, அரைத்தரிப்பு வைத்துக் காட்டியவரும் வண. யக்கோமே கொன்சால்வேஸ் சாங்கோபாங்க அடிகளாரேயாகும். இதற்குமுன் தமிழுக்கு முழுத்தரிப்பு அரைத்தரிப்பு இல்லை. யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரியின் புகழ்வாழ்ந்த அதிபராய் இருந்த வண. பற்றிக் டன் அடிகளாரே முதன்முதல் தமிழ்—ஆங்கில அகராதியை எழுதியவரும், தமிழ்ச் சுருக்கு எழுத்தைக் கண்டுபிடித்துத் தமிழ் நீவிரலிகிதம் என்ற நூலையும் எழுதி தமிழுக்குத் தொண்டுசெய்து தமிழை வளர்த்த ஐரோப்பிய முதல் வெள்ளைக் குரவராகும்.

"பன்மொழிப் பண்டிதரும், சொல் ஆராய்ச்சி வல்லுனருமான வண. நல்லூர் சுவாமிகள் நூல்களை எழுதித் தமிழே உலகின் மூத்தமொழி என்பதை ஐயந்திரிபுக்கிடமின்றி வெளிப்படுத்தியுள்ளார்.

(தொடர்ச்சி 8-ம்பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

அன்புத் தம்பி தங்கையரே!

நமது அன்புத்தந்தை அருளப்ப பாப்பரசர் சென்ற நத்தால் திருநாளன்று மகிழ்ச்சிக்குரிய ஒரு பெரியசெய்தியைத் தெரிவித்துள்ளார். அதாவது, நிகழும் 1962–ம் ஆண்டிலே 2–ம் வத்திக்கான் பொதுச்சங்கம் கூட்டப்படும் என்பதுதான். திருச்சபையின் பொதுச்சங்கம் என்றால் என்ன என்று உங்களுக்குத்தெரியுமா? உலகத்திலேஉள்ள மேற்றிராணிமார் எல்லாரும் பரிசுத்த பாப்பரசருடைய தலைமையின்கீழ் ஒன்றாகக்கூடித் திருச்சபையின் வளர்ச்சிக்கு ஏற்ற தீர்மானங்களைச் செய்வார்கள். இப்படிப்பட்ட பெரும்சங்கம் வெற்றிகரமாக நடந்தேறுவதற்கு ஆண்டவரின் அருள் அதிகம் அவசியம். ஆகையினால்தான் பரிசுத்தபாப்பரசர் திருச்சங்கத்தின் சித்திக்காக மன்றாடும்படி கிறிஸ்தவர்கள் எல்லாரையும் கேட்டுள்ளார்; விசேஷமாகச் சிறுபிள்ளைகளைக் கேட்டுள்ளார். அதற்காக ஒரு செபத்தையும் தாமே இயற்றியுள்ளார். அந்தச்செபம் இங்கு பிரசுரிக்கப்படுகிறது. அதை நீங்கள் ஒவ்வொருநாளும் தவறாமல் பத்தியோடுசொல்லி வாருங்கள். பொதுச்சங்கத்தின் சித்தியினால் அதிகநன்மை அடையப்போகிறவர்கள் நீங்கள்தானே!

இம்மாதம் 18— 25 வரை கிறிஸ்தவஒற்றுமையின் அட்டகம், பரிசுத்த பாப்பரசர் விரும்புவதுபோல், கத்தோலிக்க திருச்சபைக்கு வெளியே இருக்கும் கிறிஸ்தவர்கள் எல்லோரும் கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்து ஒரே தலைவரின்கீழ் ஒரேமந்தையாய் ஒற்றுமைப்பட்டு வாழும்படி இந்த எட்டு நாட்களிலும் அதிகபாக மன்றாடி, ஒறுத்தல் முயற்சிகளை ஒப்புக்கொடுத்து வாருங்கள். சுபம்!

அன்புள்ள அண்ணா.

## திருச்சங்கத்தின் சித்திக்காக பாப்பரசர் இயற்றிய செபம்

திவ்விய இஸ்பிரீத்துசாந்துவே! உமது பிரசன்னத்தினாலும், உறுதியான வழிநடத்துதலினாலும் திருச்சபையோடு என்றுமிருக்கும்படி யேசுவின் நாமத்தினால் பரமபிதாவினால் அனுப்பப்பட்டவரே! திருச்சபையின் பொதுச்சங்கத்தின்மேல் உமது நிறைவான வரங்களைப் பொழிந்தருளும்படி தேவரீரை இரந்து மன்றாடுகிறோம்.

எமது மதுரமான ஆறுதலும், ஆசிரியருமானவரே! பரிசுத்த பாப்பரசரின் அழைப்புக்கிணங்கி உரோமாபுரியில் திருச்சங்கங்கூட மகிழ்ச்சியுடன் வந்துசேரும் ஆயர்களின் மனதுகளை உமது தெய்வீக பிரகாசத்தால் நிரப்பியருளும்.

இத்திருச்சங்கத்தின் விளைவாகச் சுவிசேஷத்தின் ஒளியும், பலமும் உலகமக்களிடையே அதிகமதிகமாய்ப் பரவவும், கத்தோலிக்கவேதமும் அதைப்பரப்பும் பணியும் இனிதே வளம்பெறவும், திருச்சபையின் போதனையும், நல்லொழுக்க வழிகாட்டுதலும் எல்லோராலும் பூரணமாய் ஒப்புக்கொள்ளப்படவும் வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்.

எமது ஆத்துமத்தின் மதுரமான வழிகாட்டியே! நாங்கள் மனத்தாழ்ச்சியும், அமைச்சலும் உள்ளவர்களாயிருக்கவும் திருச்சங்கத்தின் முடிவுகளை நன்றிநிறைந்த மனதுடன் ஏற்று, அனுசரிக்க ஆசைப்படவும் எங்கள் மனதைச் சத்தியத்தில் உறுதிப்படுத்தியருளும்.

கிறிஸ்துநாதருடைய பெயரில் பெருமைபாராட்டிக்கொண்டு அவரால் நிறுவப்பட்ட ஏக மந்தையைவிட்டு இன்னும் பிரிந்துநிற்பவர்கள் கடைசியாய் ஒரே மேய்ப்பனின்கீழ் ஒற்றுமையைக் கண்டடையச் செய்தருளும்படி மன்றாடுகிறோம்.

முன்னொருநாள் பெந்தெக்கோஸ்துதினத்தில் தேவரீர் புரிந்த அற்புதங்களை எங்கள் காலத்திலும் இன்னொருமுறை செய்தருளும்படி கெஞ்சி மன்றாடுகிறோம். உமது திருச்சபை யேசுநாதருடைய தாயாரான பரிசுத்த கன்னிமரியம்மாளுடன் தளராத வேண்டுதலில் ஒன்றித்திருப்பதாலும், அர்ச். இராயப்பரின் வழிகாட்டுதலைப் பின்பற்றுவதாலும், எமது திவ்விய இரட்சகரின் இராச்சியம்—உண்மையினும், நீதியினும், அன்பினும் சமாதானத்திலும் இராச்சியம்—உலகெங்கும் பரவச்செய்தருளும் சுவாமி, ஆமென்யேசு.

குறிப்பு: இச்செபத்தைப் பத்தியுடன் செபிப்போர் அடையக்கூடிய பலன்களாவன:

1. பத்துவருட அபூரணபலன். (ஒவ்வொரு முறையும்)
2. நாள்தோறும் ஒருமாதமளவாகச் செபித்தால் (வழமையான நிபந்தனைகளுக்கிணங்க) ஒரு பரிபூரணபலன்.

### அர்ச். டோமினிக் சாவியோவின் வாழ்க்கையில்

## சிறியதோர் சம்பவம்

முரியால்டோ கிராமத்தில் சாள்ஸ் குடும்பத்தினர் வசித்தசமயம், தமது இல்லத்தில் விருந்துண்ணும்படி விருந்தினராக ஒருவரை அழைத்திருந்தனர். குறித்த சமயத்தில் விருந்தினரும்வந்து சேர்ந்தார். சாள்சும் அவர் மனைவியும் விருந்தினராக வந்தவரை அன்புடன் வரவேற்று உபசரித்தனர். விருந்துண்ணும் சமயம் சவியோவைக் காணவில்லை. எங்கும் தேடினர். கடைசியாய் வீட்டின் மூலையொன்றில் அவர் நின்றுகொண்டிருக்கக் கண்டனர்.

விருந்தினராக வந்தவர் சென்றபின் சாள்ஸ் சவியோவின் நடத்தைக்கு ஏதோ காரணம் இருக்கவேண்டுமென்பதை ஊகித்தாரேயன்றி, அக்காரணம் என்னதான் என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. தன் அருமை மைந்தனின் பக்கத்தில்போய் அமர்ந்துகொண்டார். சாவியோவின்கரங்களைத் தன் கரங்களில் எடுத்து அன்புடன் கேட்பார்: "சாவியோ, விருந்துண்ணும் சமயம் ஏன் மூலையில் போய் நின்றுகொண்டிருந்தாய்? பண்பற்ற செயலல்லவா அது"? அவர் குரலில் கண்டிப்பல்ல கனிவே இழையோடிற்று.

"அப்பா நான் வேணுமென்று அப்படிச் செய்யவில்லை. எல்லோருடன் சேர்ந்து சாப்பிடத்தான் தயாராக நின்றுகொண்டிருந்தேன். ஆனால், நீங்கள் விருந்தினராக அழைத்தவர் செபம் சொல்லாமல் சாப்பிட உட்கார்ந்தார். ஆண்டவரின் ஆசீர்வாதத்தைப் பெறாமல் மிருகம்போல் சாப்பிட உட்கார்ந்த அவருடன் எப்படி அப்பா சாப்பிடுவது? நான் எப்படி அவருக்குப் புத்திசொல்லுவது? அதனால்தான் அப்படிச்செய்தேன். உங்கள் மனதிற்கு வருத்தத்தைக் கொடுத்தேனென்றால் மன்னித்துவிடுங்கள் அப்பா."

இது எமக்கு எவ்வளவு முன்மாதிரிகை நிறைந்த செயல்? எமது பாதுகாவலராகிய அவரை நாம் கண்டுபாவிக்கின்றோமா?

### விடை கூறுங்கள்

நான் வியாபாரம் செய்யுமுகமாக என் இனத்தவரிடமிருந்து ஒருதொகைப் பழங்களை வாங்கினேன். ஆனால், பழங்களின் மொத்தத்தொகையை முறையே ஐந்தாலும், ஏழாலும், ஒன்பதாலும், பதினைந்தாலும் மிச்சமின்றிப் பிரிக்கும்பொருட்டு அத்தொகையுடன் மேலும் ஒருபழம் சேர்க்கப்படவேண்டும். நான் வாங்கினபழங்களின் தொகையைக்கூறுக.

விடைகள்:

20–ந் திகதிக்குமுன் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படவேண்டும்.

"அண்ணா"
அர்ச். சூசையப்பர் தாபனம்
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்.

### அர்ச்சியசிஷ்ட அந்தோனியாரின் தருமக்கோணம்

சென் வின்சென்ற் டி போல் தருமசபை யாழ்ப்பாணம்



### நத்தால், புதுவருட சோபனம்

சென்வின்சென்ற்டிபோல்சபை(அர்ச். சூசையப்பர் பந்தி)யின் அங்கத்தவர்கள் தங்கள் ஏழைகளுக்கு உதவி செய்யும் பொருட்டுத் தயாளகுணத்தோடு தருமம் ஈந்தருளிய சகல பரோபகாரிகளுக்கும் மனமுவந்து நன்றிகூறுகின்றார்கள். இன்னும் அர்ச். அந்தோனியாரின் தருமமுயற்சியை எங்கும் விளங்கவைக்க முன்னிற்கும் நேயர்களுக்கும் நத்தார் – புதுவருட சோபனம்கூறி, ஆத்தும சரீர நன்மைகளை ஏராளமாய்ப் பொழிந்தருளும்படி கருணை நிறைந்த திவ்வியயேசுவைப் பிரார்த்திக்கின்றார்கள்

### கேட்ட நன்மைகள் அனுகூலமானதினால் அப்பத்துக்கு அனுப்பப்பட்ட காணிக்கைகள்

கல்கமுவா: ஏ. யுவான்பிள்ளை 5-00, ரி. ஜேற்றூட்டம்மா 4-00, வி. சந்தியாப்பிள்ளை 6-00, எம். சந்தியாப்பிள்ளை 5-00 — அக்கரபற்றன: ஏ. எஸ் பிரான்சீஸ் 2-00, எலிசபேத் யோண் 4-00 — இறம்பைக்குளம்: ரி. பிலிப்பாச்சி 5-00 — இற்றாலை: பிறுங் அன்ரன் 6-00, ஏ. ஈ. லியோ 10-00—கட்டைக்காடு: ஆர். எஸ். பி. எஸ். பிள்ளை 16-00, மிஸ் ஆர். எம். பி. பிள்ளை 7-00—தலவாக்கொல்லை: ரி. ஏ. குருஸ் 4-00, ஓர் உபகாரி 43-00, ஏ. லூர்துமேரி 5-00 — மன்னம்பிற்றி: வி. எம். ஜே. கந்தையா 23-00 — முல்லைத்தீவு: எஸ். எம். இளையதம்பி 6-00 — முள்ளிக்குளம்: எம். எஸ். டி மெல் 2-00 — மிருசுவில்: பி. ஜே. சிறில் 3-00 — வேப்பங்குளம்: எம். பிலோமினம்மாள் 2-00—கொழும்பு: மிசெஸ் அன்ரன் 8-00 — கொற்றகின்ன: மிஸ் பி. புஸ்பராணி 3-00—ஆனையிறவு: எஸ். பி. அருளானந்தம் 2-00—நெடுந்தீவு: ஓர்உபகாரி 5-00 யாழ்ப்பாணம்: மிஸ். ஏ. பிரான்சிஸ் பிள்ளை 4-00, எஸ். சவிரிமுத்து 3-00, எம். வி. ஆசீர்வாதம் 2-00—மஸ்கேலியா: ஞ. அந்தோனிஅம்மா 2-00—விடத்தல்தீவு: ஏ. மத்தியூஸ் 5-00—பாலகுடா: என். ஜே. டி அல்மோடா 5-00—அம்பாகலை: பி. அருளானந்து 2-00—நெடுந்தீவு: ஞா. விற்ரோறியா 10-00—உடல்பு: கே. எஸ். பெர்னாண்டோ 2-50—குருநாகல்: ஜி. எஸ். சின்னத்துரை 2-00—செட்டிகுளம்: யோ. இராயப்பு 20-00— நீர்கொழும்பு: மிஸ். ஏ. என். வில்லவராயன் 9-00— வாய்க்கால்: வி. வி. யோசப் 6-00— முள்ளிக்குளம்: எஸ். அக்காஸ்லெம்பேட் 2-00—சிங்கப்பூர்: எம். ஏ. பெஞ்சமீன் 30-00—சுண்டிக்குளி: எல். அந்தோனிப்பிள்ளை 4-00— கொழும்பு: க. அந்திரேஸ் 6-00—கம்பளை: மிஸ். ஏ. டி. சேவியர் 5-00—கற்பிட்டி: எஸ். ஜெயசீலி குருஸ் 3-00— நீர்கொழும்பு: ஞ. க. செல்லத்துரை 10-00—கற்றன்: மிஸ். பி. அந்தோனிப்பிள்ளை 5-00— மிருசுவில்: பி. ஏ. அரியமணி 2-00— கற்பிட்டி: எல். கிறிஸ்பின் குருஸ் 2-00 —நிந்தனி: வ. அந்தோனிப்பிள்ளை 3-00—வத்தளை: மிஸ். வி. எஸ். யோசப் 3-00—எழுதுமட்டுவாள்: மி. அருளானந்தம் 1-50—புத்தளம்: மிஸ். என். ஜே. அல்விறேற் 8-00—மாம்புரி: வ. மனுவேல் 5-00—அல்வாய்; ஞ அன்னம்மா 6-00—கற்பிட்டி: எஸ். பி. நோயீஸ் 13-00—நீர்கொழும்பு: மிஸ். அலீக் மெலே 6-00, ஒ. எக்ஸ். பெர்னாண்டோ 10-00—தலைமன்னார்: வி. அருளப்பு லேயம் 5-00—சுருவில்றோட்: அ. மேரிப்பிள்ளை 10-00—முந்தல்: எம். அந்தோனிப்பிள்ளை 2-50—சக்கோட்டை: வ. அந்தோனிப்பிள்ளை 5-00, ச. சூசைப்பிள்ளை 5-00—பருத்தித்துறை: ம. அருளப்பு 5-00—சூராவத்தை: பி. ஏ. ராசரட்ணம் 3-00 — வட்டவளை: மிஸ். ஜோன் ரட்ணம் 5-00—செட்டிகுளம்: தே. வஸ்தியாம்பிள்ளை 10-00—கேகாலை: ஏ.யுவக்கீன் சர்வீஸ் 5-00—உயிலங்குளம்: அ. பிலீப்பா 3-00— அடம்பன் ரோட்: எஸ். யுவக்கீம் 2-00—கொழும்பு: எஸ். எக்ஸ். பெர்னாண்டிஸ் 5-00 — சக்கோட்டை: ம. ஆரோக்கியம் 10-00—அச்சுவேலி: மிஸ். எஸ். யோசேப் 5-00.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 2662

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

வேலணைகிழக்கு
மூத்ததம்பி சடாசிவம் —வழக்காளி.
எதிராக, வேலணைகிழக்கு
எஸ். பசுபதிப்பிள்ளை கைம்பெண்
அன்னப்பிள்ளை —எதிராளி.
கொய்யாத்தோட்டம், சுண்டிக்குளி
4-ம்றோட்டு

1. கனகசபை பரமசாமி பெண்சிவயோகம்
2. ஷையூர் கனகசபை பரமசாமி களபூமி காரைநகர்
3. எம். வேலுப்பிள்ளை கைம்பெண் வள்ளியம்மை
4. ஷையூர் P. மயில்வாகனம் — சேர்க்கப்பட்ட பேர்கள்.

யாழ்ப்பாணம டிஸ்திறிக்கோட்டின் M. B. 2662-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால்விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1962-ம்ஞு மாசிமீ 3-ந்வ. சனிக்கிழமை முற்பகல் பத்துமணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,855-உம், ரூபா 1,500-க்கு 22-1-59 தொடக்கம், 13-10-59 வரை 12வீதமான வட்டியும், அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதமானவட்டியும், கோட்டுச்செலவு 151ரூபா 55சதமும்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் தீவுப்பகுதி வேலணைக்கோயிற்பற்று, வேலணை கிழக்குஇறை "கொம்மட்டிப் புலம்" பர. செ. இலா. நாற்பதேகால் (ப. செ. இ. $40\frac{1}{4}$), கிணறும். எல்லை: கிழக்கு — நாகலிங்கம் பெண் நாகம்மாவிற்கும், சின்னையா கைம்பெண் சின்னப்பிள்ளைக்கும் உரிய ஆதனங்கள். வடக்கு — கணபதி பெண் நாகம்மாவிற்கும், முருகேசு கதிரவேலுவிற்கும் உரிய ஆதனங்கள். மேற்கு — ஒழுங்கை. தெற்கு — குமாரரெத்தினம் பெண் சின்னம்மாவிற்கும், சண்முகம் தம்புவிற்கும் உரியஆதனங்கள். இதடங்கலிற் சொரியலாய் பர. செ. இலா. முப்பத்துமூன்றரை (ப. செ. இ. $33\frac{1}{2}$)யும், அதற்குரியவைகளும்.

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்.

காரைநகர்,
1961-ம்ஞு மார்கழிமீ, 21-ம்வ.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் பக்கம்

# கத்தோலிக்க ஆசிரியர் நிலைமை

கல்விபயிற்றும் பாடசாலைஆசிரியர் மேல்பொறுப்புவாய்ந்த பலகடமைகள் சுமத்தப்பட்டிருப்பதை யாவருமறிவர். இதைஉணர்ந்த அரசாங்கம் பலகோடி ரூபாய்களை இறைத்துக்கொண்டிருக்கிறது.

ஆசிரியர் கடமைகளுள் முக்கியமான கடமை சமயக்கல்வி போதிப்பதாகும். இன்று சமயக்கல்வியும் அரசாங்கத்தினுல் ஓர்கட்டாயபாடமாகக் கணிக்கப்பட்டுள்ளது.

தங்கள்தங்கள் சமயங்களைச் சிறப்புற வளர்க்கப் பாடசாலைகளே தகுந்தவழியென்று சென்றகாலங்களிற் சமயஅதிகாரிகள் தங்கள்முகாமையின்கீழ்வைத்து நடத்திவந்த பாடசாலைகளில் பெருந்தொகையானவை சென்றஆண்டிலிருந்து அரசாங்கப் பொறுப்பிலெடுக்கப்பட்டு இன்றுடன் ஒருவருடம் பூர்த்தியாகிவிட்டது.

சமயஅதிகாரிகளின் பொறுப்பிலிருந்துவந்த பாடசாலைகள் இப்போது அவ்வச்சமய ஆசிரியர்களின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவ்வேளையில் சமயஆசிரியர்கள், அதிலும் கத்தோலிக்கசமய ஆசிரியர்கள் தங்கள் பொறுப்பையும், கடமையையும் உணர்ந்து செயலாற்றவேண்டியவர்களாய் இருக்கிறார்கள்.

இன்று பாடசாலைகளின் நிலைமை? என்ற கேள்வியடையாளத்துடனிருந்தாலும் அரசாங்கம் பௌத்தசமயத்திலே கவனம்செலுத்தினுலும் அவ்வச்சமய பக்திஆசிரியர்களிடமிருந்தே உதயமாகி உருவாகி நடைமுறைக்கு வரவேண்டிய காலமாகிவிட்டதென்பதை ஆசிரியர் கருத்திற்கொள்ளல் வேண்டும்.

சமயமென்றது அவரிவருடைய முகத்துக்காகவும், அதிகாரபயத்துக்காகவும், சுயநலத்துக்காகவும் அனுட்டிக்கப்படுவதல்லவென்பதை உணர்ந்து மனப்பூர்வமாக அனுட்டிக்கப்படும் கடவுள்பக்தியென்பதை நாம் இவ்வேளையில் மறவாதிருக்கவேண்டும்.

இந்தத் தலைமுறையில் நாம் கண்டு கேட்டறியாத ஓர்இருள்மேகம் இன்று கத்தோலிக்கசமயத்தைச் சூழ்ந்துகொண்டிருக்கிறது. சமயஅதிகாரிகள் கவலையுடன் எதிர்காலத்தை நோக்கிக்கொண்டிருக்கிறார்கள். கத்தோலிக்க மக்களுள் ஓர்பாலார் எவ்விதகவலையுமின்றித் தங்கள்பிள்ளைகளை வளரவிட்டிருக்கிறார்கள். இன்னோர்பாலார் கவலையுடன் தங்கள்பிள்ளைகளை வளர்க்கிறார்கள். இன்னோர் பாலார் "நெய்க்குடமுடைந்தது நாய்க்கு வேட்டை" என்றவாறு கத்தோலிக்கராயிருந்தும் கத்தோலிக்க சமயஅதிகாரிகளைப்பற்றி ஏதேதோஉளறி மகிழப்பார்க்கிறார்கள். இந்நிலைமைகளையெல்லாம் கடந்த ஓர்பொறுப்பான நிலைமையில் கத்தோலிக்க ஆசிரியர்கள் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை மறுக்கமுடியாது.

கத்தோலிக்க குருமாரின் பொறுப்பில் பாடசாலைகளிருந்தபோது அவர்களின் கண்காணிப்பின்கீழ் உலக கல்வியும் அத்துடன் சமயகல்வியும் கவனிக்கப்பட்டுவந்தது. அடிக்கடி குருமார் சமயபாடத்திலும் தீவிரகவனம்செலுத்திப் பரீட்சைகளும் நடாத்திவந்ததால் கத்தோலிக்க ஆசிரியர்கள் சமயபாடத்தில் கவனம்செலுத்தவேண்டிய கட்டாயமும் ஏற்பட்டது.

அன்று குருமாரின் முகத்துக்காகச் சமயபாடத்தை ஆசிரியர்கள் படிப்பித்தனரா? அல்லது சமயத்திற்கொண்ட பக்திபற்றுதலால்தான் சமயபாடத்தைப்படிப்பித்தனரா? என்றகேள்விக்குப் பதில்காணும்இடத்தில் நிற்கின்றனர் கத்தோலிக்க ஆசிரியர்கள்.

அன்று மாணவர்கள் செபங்களைப் பாடமாக்காவிட்டால் கண்டித்திருப்போம்; ஞாயிறுகடன்நாட்களை அனுசரியாவிட்டால் கரிசனை எடுத்திருப்போம்; தேவதிரவிய அனுமானங்களை ஒழுங்காகப் பெறவில்லையென்றால் கவனம் செலுத்தியிருப்போம்; நாளாந்த பூசைப்பலியில் மாணவர் கூடியமட்டும் பங்குபற்றும்படி தூண்டுதல்செய்திருப்போம்; நன்முன் மாதிரி காட்டியிருப்போம், காட்டமுயன்றிருப்போம். இன்றையநிலைமையில் நாம் இப்படியான கவனம் கொள்ளுகின்றோமா? அல்லது நமக்கென்ன சமயத்தைப்பற்றி என்ற வேண்டாவெறுப்புக் கொள்ளுகின்றோமா? என்று நம்மைநாமேகேட்டுப் பதில் காண வேண்டியவர்களாயிருக்கிறோம்.

அன்று நாம்வணங்கிய கடவுளாகிய யேசுக்கிறீஸ்துநாதர் இன்றும் அதே நிலைமையில் ஓர்அணுவளவும் மாறுபாடின்றி இருக்கிறார் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

நம்நிலைமை ஆசாடபூதிவேஷமாக மாறுமானுல் அதையிட்டுநாம் நாணித் தலைகுனிய வேண்டியவர்களாயிருக்கின்றோம். அன்றுநாம் உண்மையான தேவனுக்கு ஊழியம் செய்தோமா? அல்லது குருமாரின் முகத்துக்குப் பயந்து ஊழியம்செய்தோமா என்று சிந்திக்க வேண்டியவர்களாயிருக்கின்றோம்.

ஆசிரியனின்கடமை ஆசாடபூதித்தனமல்ல; அப்படிப்பட்ட ஆசாடபூதித்தனத்தை மாணவரில்கண்டு கடிந்துகொள்ளும் ஆசிரியன், தானே ஆசாடபூதியாக மாறமுடியாது. அப்படியான ஓர்மாற்று ஏற்படுமாயிருந்தால் அவ்வாசிரியர் மக்களாலும், மாணவர்களாலும் அடையவேண்டிய மனப்பூர்வமானமதிப்பை அடையக்கூடியவராக இருக்கமாட்டார். கடவுளும் அவருடைய மனச்சாட்சிக்கு ஆறுதலோ, இன்பமோ அருளமாட்டார்.

நன்மதிப்பும், நயசுகமும் பெறக்கூடியகாலத்தில் வேஷம்போட்டசிலர் இன்று என்னவேஷம் போடப்போகிறார்களென்பதை உலகம் எதிர்பார்க்கிறது. வேஷம்போடவிரும்பாமல் தங்கள் சமயத்துக்கே தலைவணங்கியவர்கள் இன்றும் அதேநிலைமையில் உறுதியுடனிருந்துவருவார்கள்.

இன்று கத்தோலிக்க சமயத்திற்கேற்பட்ட சோதனைவேளையில் கத்தோலிக்க ஆசிரியர்கள் தங்கள் மகத்தான பொறுப்பை உணரவேண்டும். "அரசனுடையதை அரசனுக்கும், கடவுளுடையதைக் கடவுளுக்கும்கொடுங்கள்" என்று ஈராயிரம் வருடங்களுக்குமுன் சொன்ன எம்பெருமான் யேசுக்கிறீஸ்துவின் கருத்தைஉணர்ந்து கடமையிற் கடவுளைக்கண்டு, இவ்வுலகவாழ்வு வாழப் பிறந்தவர்களல்ல நாம்; மறுவுலக வாழ்வுக்காக வாழப்பிறந்தவர்கள் என்பதை மனதில்பதித்து மாணவர்களையும் அதன்பாதையில் வழிநடத்தத் தவறாது உறுதிபூணுவார்களாக.

—எம். டி. ரேச்.

> "ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."

### தகமைப் பத்திரம்

கத்தோலிக்க சமயத்தைப் பிள்ளைகளுக்குக் கற்பிக்கக் கடமைப்பட்ட ஆசிரியர்கள் இத்தொண்டை நிறைவேற்றுவதற்கு அவசியமாயுள்ள தகமைப்பத்திரத்தை மேற்றிராணியாண்டவரிடமிருந்து ஒவ்வொரு பாடசாலையினதும் பங்குக்குருவர்மூலம் பெற்றுக்கொள்ள[illegible]

# நாமும் கொண்டாடினுல் என்ன?

— யோ. யோ. —

வெய்யிலிலும் மழையிலுங் கஷ்டப்பட்டு விளைவித்து அறுக்கும் முதல் அறுவடை நெல்லைப் பொங்கல் ஆக்கி மழையையும் வெய்யிலையும் தரும் சூரிய பகவானையும், வயலைச் செப்பனிட உதவிபுரிந்த மாடுகளையும்வணங்கிப்புகழ்ந்து, போற்றிச் சுற்றத்தோடுண்ணுகிறார்கள் இந்து மக்கள். இதே விழாவைக் கிறிஸ்தவர்களாகிய நாம் ஏன் கொண்டாடுவதில்லை? உழவர்களுள் கிறிஸ்தவர்கள் இல்லையா? அவர்கள் அந்தக் காலத்தில் நெல் அறுப்பதில்லையா? அறுவடைக்குதவிபுரிந்த கடவுளுக்கு நன்றி கூறுவதில்லையா?

கத்தோலிக்க மதத்தில் சூரியனையோ? ஆடு, மாடுகளையோ வணங்குவதில்லை. வணங்குவதும்தவறு. ஆகவே, பொங்கல் காலத்தில் அவைகளை வணங்கமுடியாது. கூடாது. ஆனுல், வருடம் முழுவதும் அந்த ஏழை உழவர்களுக்கு மழை, வெய்யில், மாடு இவைகளைக் கொடுத்து உதவிபுரிகின்றார் கருணையங்கடவுள். அறுவடைமுடிந்ததும் அவருக்கு நன்றிசெலுத்தும்முறையாகக்கிறிஸ்தவர்கள் பொங்கல் பொங்கி, அன்று சர்வேசுரனை வாழ்த்தி, வணங்கி உற்றஞ் சுற்றத்தோடு மகிழ்ந்துண்ணில் பிழை எதுவுமில்லை.

உண்மையில் பொங்கல்விழா ஒரு தனிச் சமூகத்தினதோ, ஒரு தனி மதத்தினதோ திருநாளெனக்கொள்வது உசிதமல்ல, அது தமிழர்க்கோ திராவிடர்க்கோ மட்டுமல்ல மனித இனத்துக்கேயுரிய பொதுவிழா. பொங்கலின் நோக்கத்தை அறிந்தால் இதைநாம் நன்றாய் உணரமுடியும். பொங்கல்விழாவின் ஒரேயொரு நோக்கம் நன்றியுணர்வே. அந்நன்றியுணர்வைப் பல்வேறு நாடுகளும் பல்வேறு முறைகளில் கொண்டாடுகின்றன, ஒவ்வொரு தேசத்தாரும் தம்தம் அறுவடைகாலங்களில் நன்றியுணர்வு விழாவைக் கொண்டாடுகின்றனர். தாயாகிய பூமியிலிருந்து நமக்குக்கிடைத்த விளைச்சலை முதன் முதலில், அவ் விளைச்சலின் காரணகர்த்தர் யாரோ அவருக்குப் படைக்கும் நிகழ்ச்சிதான் பொங்கல்.

தமிழகத்திலே தைமாதத்தில் அறுவடைதொடங்கும். ஆகவே, நன்றியறிதல் நாளும் தையிலேயே வருகின்றது. பொங்கல்விழாவில்ஏனைநாடுகளின் நன்றியறிதல் விழாவில் காணமுடியாத ஆழ்ந்த கருத்தும், ஆழங்காணமுடியாத கலையுணர்ச்சியும் தமிழகத்தில் ஒளிர்கின்றன. கழனியிலே விளைந்த நெல்லரிசியும், கரும்புத்தட்டையிலே கனிந்த கற்கண்டும், பசுகறந்தபாலும், சமையற்கலையினுல் ஒன்றுசேர்ந்து பொங்கற்சோருகத்தோன்றி, உழுதுவிதைத்து, உரமிட்டு உழைத்த உழவனின் உள்ளத்தை உவகைபூக்கச் செய்கின்றது. பொங்கலோ, பொங்கலெனும் புளங்காகிதக் குரலிலே "இவ்வாண்டு இவ்வளவு தவசதானியங்களைத் தந்த ஆண்டவனே! உனக்கு நன்றி" யெனும் அர்த்தம் தொனிக்கின்றது.

கிறிஸ்தவர்களாகிய நாம் பொங்கல்விழாவின் அர்த்தம் விளங்காமையால், அதைச் சைவத்தின் தனிச்சொத்தெனத் தவறுதலாக எண்ணிவந்துள்ளோம். இன்று அதன் உண்மைநோக்கத்தை அறிந்துள்ளோம். அவ்வுண்மைநோக்கம் அவ்விழாவை நாம் கொண்டாடவேண்டுமெனும் கடமையையும் காட்டுகின்றது. "ஏர் முனைக்கு நேர் இங்கே எதுவுமே இல்லை" எனப் பாடினுல்மட்டும் போதாது; அங்கீகரற்ற தொழிலின் ஆதிகாரணருக்கும் நன்றிகூற வேண்டுமன்றோ!

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M.B. 2628

நல்லூர், யாழ்ப்பாணம்
1. கனகசபாபதி தனபாலசிங்கமும்
2. பெண் தேப்பமலரும்.

— வழக்காளிகள்,

எதிராக, உரும்பிராய்
1. அப்பாத்துரை சிவகுருநாதரும்
2. பெண் அன்னம்மாவும்.

— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டின் M.B. 2628-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் இருதுண்டுக்காணிகளை 1962-ம்ஆ தைமீ 27-ந்உ சனிக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தந்தக் காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 10,000-த்திற்கு 5-1-59 தொடக்கம் 1-3-60 வரை 8வீதவட்டியும், அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதமான வட்டியும், கோட்டுச்செலவு 460 ரூபா 07சதமும்.

இத்தீர்வைத்தொகையில் ரூபா 4,000 கொடுபட்டிருக்கிறது. மிகுதித் தீர்வைத்தொகைக்கும், கோட்டுச்செலவுக்குமாகக் கீழ்விபரிக்கப்படும் ஆதனங்கள் விற்கப்படும்.

#### காணிகளின் விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திரிக் வலிகாமம்கிழக்கு, கோப்பாய்க்கோயிற்பற்று உரும்பிராய்இறை, "கேசல்" பர. நில. இலா. நாலும், $\frac{5}{8}$குளியும் (ப. நி. இ. 4 குளி $\frac{5}{8}$), வீடும், வடக்கில் இருக்கும் கிணற்றில் பங்குரிமையும், செய்பயிர்களும். எல்லை: கிழக்கும், தெற்கும்— ஒழுங்கை. வடக்கு — கீழ்சொல்லிய ஆதனம், மேற்கு — காலஞ்சென்ற மயில் வாகனம் [illegible] தங்கத்துக்குரிய ஆதனம் இதிலடங்கலும்.

2. ஷெ இறை 'கேசல்' பர. நில. இலா. மூன்றும், குளி முக்காலும் (ப. நி. இ. 3 குளி $\frac{3}{4}$). எல்லை: கிழக்கு — ஒழுங்கை. வடக்கு — வைத்திலிங்கம் கந்தையாவிற்கும், பங்காளருக்கும் உரிய ஆதனம். மேற்கு — காலஞ்சென்ற மயில்வாகனம் பெண் தங்கத்தின் ஆதனம். தெற்கு — இதில்சொல்லிய முதல்ஆதனம். இதடங்கலில் சொரியலாய் பர. நில. இலா. ஒன்றும், குளி பதினுறரையும் (ப. நி. இ. 1 குளி $16\frac{1}{2}$).

செ. விசாகரத்தினம்,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.

நம். 133, பருத்தித்துறைவீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்,
8-1-62.

**PITMAN**
**LONDON EXAMINATIONS**
**In Jaffna**

Private candidates intending to sit for the above examinations due to be held shortly, please contact Joseph Andrew of
MAZENOD TUTORY
which has been approved as a centre for Jaffna by
**Pitman's Institute, LONDON**

4th Cross St., Jaffna, 8-1-62. **Jos. Andrew**

### நன்றித்துதி

கம்பகாவிலுள்ள புதிய ஆலயத்தில் எழுந்தருளி இருக்கும் அப்போஸ்தலரான அர்ச். யூதா ததேயுவினுடைய கிருபையினுல் நான்குமாதகாலமாக மாருத ஒரு வியாதியிலிருந்து அவரை நினைத்தவுடனேயே குணமடைந்தேன். அதற்காக அவருக்கு நன்றியறிந்தஸ்தோத்திரம் செலுத்துகிறேன்.

ஓர் அடியான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சத்தியமறைச் சல்லாபம்

# பிழையான பழக்கவழக்கங்கள்

**முத்து:** வருகிறார் சுவாந்தர் அப்பா. அவர் பெரிய ஞானம்பேசித் திரிகிறாராம். இன்று ஆள்மாறி ஆளாகக் குறுக்குக்கேள்விகள் கேட்டுக் கொட்டத்தை அடக்குவோமடா.

**மணி:** ஆம். இப்பத்தைய குருமார் எங்கள் பழைய பழக்கவழக்கங்களில் எல்லாம் குறுக்கிடுகிறார்கள். இந்தக் கிழவனும அவர்களுக்குக் கொள்ளிகொடுக்கிற மந்திரியடா. ஆஹா! வரட்டும்.

**பிறஞ்சி:** சரி, சரி. அப்பா வாருங்கள். ஒருபோத்தல் வெள்ளையில் அடியுங்கள் பார்ப்போம்.

**சுவாந்தர்:** குடித்ததைக் குடியுங்கள். ஐந்து குடித்த உங்களுக்கு இப்போது ஒறுத்தநாள், வயிறுவீங்கப் போதாது. நான் குடிக்கிறதில்லை

**பிறஞ்சி:** ஏனப்பா, இந்தச் சுவாமியார் நடுத்தூணில் இருந்த சுரூபங்களையெல்லாம் பக்கச்சுவருக்கு ஒதுக்கிப்போட்டார். கொஞ்சமும் பயமில்லையா. இந்த அர்ச்சியசிஷ்டர்கள் அவரைச் சும்மாவிடுவார்களா?

**சுவாந்தர்:** கள்ளுக்கொட்டிலில் உங்களுக்கு அதிகஞானம் பிறக்கிறதோம்! கேள்வியைக் கேட்கிறீர்களே! இந்தக்கால விசுவாசம் குருட்டுப் போக்கில்போகிறது. கோவிலுக்குள் வந்தால் தேவசந்நிதானமான பலிபீடத்தையும், சற்பிரசாதநாதரையும் சற்றும் கவனிக்கிறார்களா? உடனே அந்தோனியார், செபஸ்தியார், சூசையப்பர், திரேசம்மாள், சதாசகாய மாதா சுரூபங்களைத்தான் தேடிஓடுகிறார்கள். தேவாலயத்தில் எவ்வளவு அவசங்கை? கர்த்தருக்கு எவ்வளவு புறக்கணிப்பு?

**மணி:** வேறென்னத்துக்காக ஆத்துப்பறந்து மக்கள் போகவேண்டும். பூசைநேரந்தானே பீடவணக்கம்.

**சுவாந்தர்:** பீடத்தில் எழுந்தருளியிருக்கும் தேவனை ஆராதனைபண்ணாமல் சுரூபங்களைத்தேடிஓடுவதும், மணடியிடுவதும் எவ்வளவு குருட்டாட்டம். கடைசியில் விக்கிரகஆராதனையாகவும் மாறிவிடுகிறதே.

**முத்து:** அப்ப, முந்தி இந்தச் சுரூபங்களை ஏற்றிவைத்தவர்கள் மடையர்களா? என்ன முட்டாள் பேச்சுப் பேசுகிறீர்?

**சுவாந்தர்:** புதுக் கிறிஸ்தவர்களுக்கு ஞாபகத்துக்கும், உற்சாகத்துக்குமாகச் சிறிது இடம்கொடுத்தது உண்மைதான். ஆனால், இன்றுள்ளவர்களும் கடவுளைத்தேடாது சுரூபங்களுக்காகமாத்திரம் கோவிலைத் தேடி வருகிறார்கள்.

**பிறஞ்சி:** அதற்காகச் சுரூபங்களைக் கொண்டுபோய் மறைத்து வைக்கவா வேண்டும். என்னுடைய சுரூபம் ......

**சுவாந்தர்:** கோவிலுக்குள் வந்தால் நேரே சற்பிரசாதநாதரைநினைக்கவும், தண்டனிட்டு ஆராதிக்கவும் சுரூபங்களைப் பின்நாடவுந்தான் அவற்றை முன்னிடத்தில் வையாது பக்கத்தில் வைத்தார் குருவானவர். இந்த அறியாமையை ஒழிக்கத்தான் சுத்தவாளரின் பிரார்த்தனைகள்கூடப் பிரசித்தமாகச் சொல்லக்கூடாதென்று திருச்சபை கட்டளையிட்டிருக்கிறது.

**பிறஞ்சி:** அதிருக்க, நோவினை முறையை ஏன் மறித்திருக்கிறார்கள். நல்லகாசு சேர்ந்ததையெல்லாம் குருமார் இழந்தார்களே.

**சுவாந்தர்:** நோவினையென்றால் உங்களுக்குத்தான் காசும், கள்ளும். இது இப்போது குறைந்துவிட்டது துக்கந்தான்!

**மணி:** குருமார் பாடு

**சுவாந்தர்:** ஐயோ அப்பா! குருமார் காசுக்காகச் சீவிக்கவில்லை. அவர்கள் துறவிகள். ஆத்துமங்களுக்காகத்தான் இருக்கிறார்கள்.

**முத்து:** நோவினையைக் கொண்டாடவிட்டால் என்ன?

**சுவாந்தர்:** எங்கள் கோவிலில் நோவினைவந்ததென்றால், சண்டையும்—கள்ளும்—சூடியும்—கூத்தும். பக்தி எங்கே? ஆன்மகாரியம் எங்கே? மனுத்தன்மை எங்கே? எத்தனைபாதகங்கள் என்றுபாருங்கள். கொடிமரம் ஏற்றுவதில் குரோதம்—கொடி ஏற்றுவதில் கோபம்—திரைப்பாட்டில் மமதை—திரைஇழுப்பதில் திமிர்—சுரூபம் தூக்குவதல்சண்டை—சுரூபக்கூடுசுமப்பதில் சள்ளு—விருத்தம்பாடுவதில் வினையம். எத்தனையை நான் அடுக்கிக்கொண்டுபோக. கடைசியாகச் சண்டையும், மண்டைஉடைவும் வழக்குக்கணக்கும். பெருநாள் வந்தால் அமையாமை—நாட்டாண்மை—பிரிவு—செலவு—மானக்கேடு. அன்பு, ஆதரவு, அமைச்சல், சமாதானம், ஒற்றுமையெல்லாம் மலையேறிவிடும். சாந்தமும் சமாதானமுமுள்ள யேசுவின் வேதம் ஆங்காரமும,குரோதமும் நிறைந்ததாக இருக்கலாமா? சற்று யோசியுங்கள்.

**முத்து:** வெடியை ஏன் மறித்தார்கள். வெடி, மேளம, தாளம், மணி, திரை இல்லாமல் என்ன பெருநாள் என்று கேட்கிறேன்?

**சுவாந்தர்:** அவையெல்லாம் உலகக்கொண்டாட்டத்தில் உங்கள் வீட்டில் வைத்துப்பாருங்கள். கோவிற் பெருநாள் பக்தியருட்சிக்குரிய விதமாக நடப்பதுதான் முக்கியம். பக்தியைக்குறைக்கும் ஆடம்பரஒலிகள் புத்திக்குரியவையல்ல. விசேடமாகக் காதைப்பிளக்கும் வெடி நம்மைக் கலக்கி, குழந்தைகளைக் குளறவைத்து, பக்தியைக் குழப்புவதில்லையா. குடிவெறி போதையில் கட்டுமீறியபாட்டுக்கள் ஒருபுறம்அலற, எந்த ஞானியாற்றான் பக்தியாகச் செபிக்கமுடியும்? சற்று யோசியுங்கள்.

**மணி:** பெருநாளுக்கு வேறு என்ன அவசியம்?

**சுவாந்தர்:** மனச்சாட்சியைத் தட்டிப்பாருங்கள். வேதத்துக்கு வெடி அவசியமா? அல்லது செபமும், தபமும் அவசியமா? இதுவரை நாட்டாண்மையாலும், தூர்இச்சையாலும் பிழைசெய்தோமென்று காட்டுமிராண்டிகளாக இராமல் இனியாகிலும் கண் திறந்து பார்க்கக்கூடாதா? விசுவாசத்தைவிற்று, வீண் பெருமையை வாங்குவதா எங்கள் வேதம். மேளம், வெள்ளைவிரிப்பால் வகுப்புவாதத்தைக் கோவிலிலும் வளர்க்கிறோமல்லவா? வேதத்தில் இந்தமுறை நியாயமானதா?

**மணி:** பெருநாள் போட்டியாக நடந்தால் எவ்வளவு சிறக்கும் என்று உமக்கு விளங்கவில்லையா?

**சுவாந்தர்:** கோவிலில் போட்டியும் வேண்டாம். பொல்லாங்கும் வேண்டாம். ஒன்பதுநாளும் அடக்கவொடுக்கமாகச் செபமும், தபமும், தர்மக்கிருத்தியங்களும் செய்து, வேதபோதகம்கேட்டு நன்மையிற் கழிக்க வேண்டும். கடைசியாக நல்ல பாவசங்கீர்த்தனஞ்செய்து, திவ்விய சற்பிரசாதம் பெற்றுச் சாந்தத்திலும், சமாதானத்திலும் புதுவாழ்வைத் தொடக்க வேண்டும்.

**பிறஞ்சி:** நோவினைக்கொண்டாட்டத்தில் இவை இல்லையா?

**சுவாந்தர்:** எங்கள் நோவினை முறையால் வழிமாறிப்போய்ப் பழியான காரியங்களைப் பெருநாளில் பெருக்குவதென்றால் கோவிலுக்கு வாராத விபசா[illegible] குருமாரைப் பகைக்கும் நா[illegible]தான் நல்லது. நல்ல கிறிஸ்தவர்களுக்கு இது வெகுதூரம். நாம் இந்தக் குருட்டாட்டங்களை அகற்ற முன்வராவிட்டால் நம் வேதம் உருக்குலைந்துவிடும். தியாகம் செய்யுங்கள் தேவனுக்காக.

**முத்து:** வேறென்ன மாமூல்வழக்கங்களைக் கூறப்போகிறீர்?

**சுவாந்தர்:** சுரூபத்துக்குக்கழுத்திலும், கரத்திலும் நேர்த்திகட்டும் அனியாயம்—சுரூபத்தில் நூல்அளந்து நம்மில்கட்டும் அவநம்பிக்கை—சுரூபக் கூட்டுக்குக்கீழ்க் குனிந்து செல்லும் குருட்டாட்டம்— நூற்றுக்கணக்கான மெழுகுவர்த்திகளைக் குவித்துக்கொழுத்திவிடும் வழக்கம்—யாத்திரைபோகாவிட்டால் கேடுசூழும் என்றபயம்—சுபமுகூர்த்தம்பார்த்துத் தேவதிரவிய அனுமானங்களைப்பெறுதல்— சுரூபங்களுக்குச் சாஷ்டாங்கஆராதனை என்று இப்படியே அடுக்கிக்கொண்டு போகலாம்.

**பிறஞ்சி:** அப்படியானல், கத்தோலிக்கருக்கு ஒரு வேதச்சடங்குகளும் இல்லை. வெறும் மௌனந்தான்.

**சுவாந்தர்:** நம்மைச் சூழ்ந்தவர்கள் கொண்டுள்ள மூடநம்பிக்கையிலும், வீண்பயத்திலும் நாம் ஊறிப்போய்த்தான் இவற்றைச்செய்கிறோம். இது விசுவாசத்துக்கு முற்றும்விரோதம். விசுவாசக்கண்ணுற்பார்த்தால் இவையெல்லாம் தேவபராமரிப்பை நம்பாமல் நாம்கொண்ட அவிசுவாசக் கொள்கைகள் என்று உணர்வோம்.

**மூவரும்:** சரி, நீங்கள் சொன்ன பெருநாள்முறை எந்த ஊரிலாவது நடைபெறுகிறதா?

**சுவாந்தர்:** பொதுவாகப் பலஊர்ஒளில் பெரும்மாற்றங்களைக் காணலாம். சென்றவருடம் மடுவுக்குப் போனவர்களுக்குத் தெரியும். நோவினை, சுற்றுப்பிரகாரம் எல்லாம் வெகுபக்தியருட்சிக்குரியவிதமாக நடைபெற்றது. அதற்கும் எங்கள் மேற்றிராணியாண்டவர் கடந்த பத்துவருடமாகத் தெண்டித்துக்கொண்டு வந்தாரர்ம். பிழையென்றாலும் அழுங்குப்பிடிபிடிப்பது தான் பலருக்குப் பெருமை என்றெண்ணுவர்.

**முத்து:** அப்படியானல், நாங்கள் என்னசெய்யவேண்டுமென்று சொல்லுகிறீர்கள்?

**சுவாந்தர்:** நாங்கள் விசுவாசிகள்! திருச்சபை அதிகாரிகளுடன் கீழ்ப்படிந்து அவர்களுடன் இணைந்துஇருந்தாற்றான் வரப்பிரசாதம் பெறமுடியும்! தேவதிரவியஅனுமானங்களை முறையாக அனுபவிக்கமுடியும். மேற்றிராணியாருக்கும், கட்டளைக்குருவானவருக்கும் அமைந்து பக்திக்கும், ஒழுக்கத்துக்கும் உதவியான காரியங்களை மாத்திரம் செய்யவேண்டுமென்பதே திருச்சபையின் கருத்து. எனவே, இந்தப் புதியவருடத்தில் நம் லௌகீக இச்சைப்படி வாதாடாமல் ஞானமேய்ப்பரின் ஆலோசனைப்படி ஒத்துழைத்துக் கோவிலில் வகுப்புவாதம், நாட்டாண்மைப் பசாசுகளைத் துரத்த வேண்டும். ஒரேபிதாவின் பிள்ளைகளும், ஒரே விசுவாசத்தின் மக்களுமாக வாழ வழிவகுக்கவேண்டும்.

**பிறஞ்சி:** புரட்சி மனப்பான்மை வேண்டும். கள்ளும் செமித்துவிட்டது. உண்மையும் உதயமாயது. அப்பாவின் ஞானம் பெரிதுதான். சரி நன்மையில்நின்று நாம் நாளைக் கழிப்பதே நியாயம் உணர்ந்துகொண்டோம், வணக்கம் அப்பா.


# ஞானோபதேசப் பாட நூல்கள்

| | | |
|---|---|---|
| 2-ம் வகுப்பு | — முதல்நன்மைக் குறிப்பிடம் | 40 |
| 3-ம் வகுப்பு | — சிறுவர் குறிப்பிடம் | 60 |
| 4-ம் வகுப்பு | — சின்னக் குறிப்பிடம் (1-ம் பாகம்) | 80 |
| 5-ம் வகுப்பு | -- சின்னக் குறிப்பிடம் (2-ம் பாகம்) | 80 |
| 6-ம் வகுப்பு | — பெரிய குறிப்பிடம் (1-ம் பாகம்) | 75 |
| 7-ம் வகுப்பு | — பெரிய குறிப்பிடம் (2-ம் பாகம்) | 75 |
| 8-ம் வகுப்பு | — பெரிய குறிப்பிடம் (3-ம் பாகம்) | 75 |
| G. C. E. Prep. | 1. அர்ச். மத்தேயு சுவிசேஷம் | 1-50 |
| | 2. மாணவர் கிறிஸ்தவபோதகம் (1) | 1-25 |
| G. C. E. | 1. அர்ச். லூக்கா சுவிசேஷம் | 1-25 |
| | 2. என் விசுவாசம் | |

மனேஜர்:

**அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,**

**யாழ்ப்பாணம்.**


## சுன்னுகம் கத். இளைஞர்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

"தற்பொழுது தமிழை உலகுக்கு எடுத்துச் சொல்லித் தமிழின்பெருமையையும், தமிழனின் பெருமையையும் பாரறிய வைக்கும் வண. சேவியர் தனிநாயக அடிகளாரையும் இவ்விடத்தில் போற்றுமல் இருக்கமுடியாது.

"ஜீத்தாம்பிள்ளை புலவர் அவர்களே முதலில் தமிழில் நாடகம் எழுதினுரென்ற பெருமையையும், மாயூரம நீதிபதி வேதநாயகம்பிள்ளை போன்ற பெரியோர்களின் சேவையையும் அறியாதவர்கள் தமிழர்களாக இருக்கமுடியாது" என்று கூறினுர்.

சுன்னுகம் றே. க. பாடசாலை தலைமைஆசிரியர் திரு. இராஜேந்திரம், திருவாளர்கள் யே. ஞானப்பிரகாசம், யோ. வேதநாயகம், க. எட்வேட் ஆகியோரும் பேசினர்.

## பாப்புவின் பிரதிநிதி 11,000 அகதிகளைத் தரிசித்தார்

கிழக்கு ஆபிரிக்காவில் பாப்பரசரின் பிரதிநிதியாகவிருக்கும் டெல் மேஸ்திரி ஆண்டகை அவர்கள் உகண்டாவிலுள்ள றிக்கிங்கா கணவாயில் அமைந்திருக்கும் அகதிகள் முகாமைத் தரிசித்து 11,000 ஆபிரிக்க அகதிகளைப் பார்வையிட்டார்.

றுவண்டா-உறுண்டியில் ஏற்பட்ட சாதிக்குழப்பங்கள் காரணமாக இம் மக்கள் தம் சொந்த நாட்டைவிட்டு ஓடவேண்டியிருந்தது. அவ்விடத்து மேற்றிராணியாரான ஒகேஸ் ஆண்டகை அகதிகளின் லௌகீக வைதீக தேவைகளைக் கவனிப்பார் எனப் பிரதிநிதி ஆண்டகை உறுதிகூறினுர்.

ஈற்றில், வெற்றிபெற்ற வீரர்களுக்கு வண. சுவாமி ஹென்றி ஜெலாண்ட் பரிசில்களை வழங்கினுர்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Sunday January 14-1962

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org